தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

பாவேந்தன் நினைவு அறக்கட்டளை
41, காவேரி சாலை, கலாசேத்திரா காலனி,
பெசன்ட் நகர், சென்னை – 600 090

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்
ஆசிரியர்	:	முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
உரிமை	:	ஆசிரியருக்கு
முதற்பதிப்பு	:	டிசம்பர், 2013
இரண்டாம் பதிப்பு	:	ஜனவரி, 2014
மூன்றாம் பதிப்பு	:	பிப்ரவரி, 2014
நான்காம் பதிப்பு	:	மார்ச், 2014
ஐந்து, ஆறு பதிப்பு	:	ஏப்ரல், 2014
ஏழு, எட்டாம் பதிப்பு	:	மே, 2014
ஒன்பதாம் பதிப்பு	:	ஜூன், 2014
பக்கம்	:	96
நூல் அளவு	:	1/8 டெம்மி
விலை	:	ரூ. 50/–
கணினி அச்சு மற்றும் வடிவமைப்பு	:	திருமதி இந்திரா காந்தி ரவி ரமணா கிராபிக்ஸ், 97890 65515
வெளியீடு	:	பாவேந்தன் நினைவு அறக்கட்டளை 41, காவேரி சாலை, கலாசேத்திரா காலனி, பெசன்ட் நகர், சென்னை – 600 090 மின்னஞ்சல் : megalai54@yahoo.com தொலைபேசி : 044 – 2491 9292

பொருளடக்கம்

		பக்கம்
	சான்றோர்கள் / பத்திரிகைகள் மதிப்புரைகள்	5
1.	தமிழ்மொழியின் சிறப்பு	13
2.	தமிழ் இலக்கணம் - சிறு குறிப்பு	15
3.	ஒற்றுப் பிழைகள்	23
4.	வலி மிகுதல் - விதிகள்	25
5.	வலி மிகா இடங்கள்	52
6.	தவறானதும் - சரியானதும்	70
7.	வருமொழிகள் வலிமிகும் நிலைமொழிகள் சில	76
8.	வருமொழிகள் வலிமிகா நிலைமொழிகள் சில	80
9.	நிறுத்தக்குறிகள்	87
10.	தமிழின் தலையாய நூல்கள்	95

முன்னுரை

கணினிமயமாகிவிட்ட இக்கால கட்டத்தில், தமிழ்மொழி பெரும் வளர்ச்சி பெற்று வருகிறது. ஒருவர் எழுதுகின்ற கட்டுரை, சிறுகதை, நாவல், நூல் முதலானவை உலகெங்கிலும் வசிக்கின்ற தமிழன்பர்களை உடனே சென்றடைந்துவிடுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் தமிழில் பிழையின்றி எழுதுவது அவசியமாகிறது. அதற்கு ஓரளவு இலக்கண அறிவை வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது. தமிழில் வெளிவருகின்ற படைப்புகளில் பல வகையான பிழைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒற்றுப் பிழைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தமிழில் ஒற்று வேண்டா என்று கூறுவாரும் உளர். தமிழை எளிமைப்படுத்துகிறோம் என்று சொல்லி, பெரும்பாலான இடங்களில் ஒற்று இல்லாமலேயே சில நாளிதழ்களும், வார இதழ்களும், மாத இதழ்களும் தமிழில் படைப்புகளை வெளியிட்டு வருகின்றன. பிழையில்லாமல் நல்ல தமிழில் எழுத விரும்புவோர் ஒற்றுப் பிழைகளைத் தவிர்த்தல் மிகவும் அவசியமாகும். வலி மிகும் இடங்களையும், வலி மிகா இடங்களையும் அறிந்து கொள்வதால் ஒற்றுப் பிழைகளைத் தவிர்க்கலாம். வலி மிக வேண்டிய இடத்தில் வலி மிகாமலும், வலி மிகாத இடத்தில் வலி மிகுந்தும் எழுதுவது தவிர்க்கப்படுதல் வேண்டும்.

இலக்கணம் படிக்காதவர்களும், தமிழ் ஆர்வலர்களும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் மிக எளிதாக வல்லெழுத்து மிகும் இடங்களையும், மிகா இடங்களையும் அறிந்துகொண்டு, தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகளை அனைவரும் அறிந்துகொள்ளுதல் வேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

வலி மிகும் இடங்கள், வலி மிகா இடங்கள் குறித்து அவ்வப் போது தினமணி நாளிதழில் தமிழறிஞர்களின் கட்டுரைகள்,

லிப்கோஅகராதி, புலவர் அ.சா. குருசாமி, கவிக்கோ ஞானச் செல்வன், புலவர் தமிழமுதன், புலவர் வெற்றியழகன், பேராசிரியர் முனைவர் வெ. முருகன், தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் ஆகியோரின் இலக்கண நூல்கள் இந்த நூலாக்கத்திற்குப் பயன்பட்டுள்ளன. இப்பேராசிரியர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகளைக் கூறிடும் இந்த எளிய வழிகாட்டி நூலை ஆக்குவதில் எனக்கு ஆலோசனை கூறி, நெறிப்படுத்திய என் போற்றுதலுக்குரிய தந்தை திரு. சிலம்பொலி செல்லப்பனார், நூலுக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் அணிந்துரைகள் வழங்கியுள்ள தமிழகத்தின் சிறந்த கவிஞர்களுள் ஒருவரான பேராசிரியர் முனைவர் பொன். செல்வகணபதி, தமிழ் இலக்கணத்தில் அரிய புலமை பெற்றுள்ளவரும், இலக்கண, இலக்கிய நூல்கள் பலவற்றைச் சிறப்பாக எழுதியுள்ளவருமான புலவர் வெற்றியழகன், சிறந்த எழுத்தாளரும், இலக்கணத்தில் வியத்தகு புலமை பெற்றவரும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை உதவிப் பேராசிரியருமான முனைவர் ய. மணிகண்டன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணைப் பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி ஆகியோருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலை அழகாக வடிவமைத்துக் கொடுத்த ரமணா கிராபிக்ஸ் திரு. மு.க. ரவி அவர்களுக்கும், கணினி அச்சு செய்ததோடு நூலை நேர்த்தியாகவும், அழகாகவும் வெளியிட உதவி புரிந்த திருமதி இந்திரா காந்தி ரவி அவர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ மணிகளுக்கும், தமிழார்வலர்களுக்கும், மெய்ப்புத் திருத்துபவர்களுக்கும் இந்நூல் மிகவும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

மணிமேகலை புஷ்பராஜ்

இந்நூலுக்குச் சான்றோர்கள், பத்திரிகைகள் அளித்துள்ள மதிப்புரைகள்

முனைவர் **பொன். செல்வகணபதி,** சென்னை

அய்யா சிலம்பொலி செல்லப்பனாரின் இயல்பான வழித் தோன்றலாக மட்டுமல்லாமல் இலக்கிய வழித்தோன்றலாகவும் முகிழ்த்து வருபவர் முனைவர் மணிமேகலை.

இலக்கணக் கடலில் எடுத்தடி வைக்கும் இவரது துணிவு பாராட்டுக்குரியது. எவரும் வேம்பாகக் கருதும் இலக்கணத் துறையை எளிமையாக எல்லோருக்கும் கொண்டுபோய்ச் சேர்க்க விரும்பும் இவரது விருப்பம் போற்றத்தக்கது. பிழையின்றி மொழியைப் பேசவும் எழுதவும் வேண்டும் என்பது பெரும் புலவர்களின் விருப்பம். ஆனால் புலவர்கள் பிழைகளைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

முனைவர் மணிமேகலையும் பிழை பொறுக்க முடியாமல்தான் இந்நூலை அளித்துள்ளார். ஒற்றுப்பிழை அனைவருக்கும் மயக்கத்தைத் தரக்கூடிய ஒரு பிழை. இதழாளர்கள் பலரும் இப்பிழைக்கு ஆளாகித் தவிக்கின்றனர். பலர் இதை ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை! ஒற்றுப் பிழையால் பொருட்பிழை ஏற்படவும் வாய்ப்புண்டு என்பதையும் பலர் உணர்வதில்லை! அத்தகைய ஒற்றுப் பிழைகளைக் கண்டறியவும் களைந்தெறியவும் ஓர் எளிய கையேடு இன்றியமையாதது.

அத்தகைய கையேடுகள் பல முன்னரே வெளிவந்திருந்தபோதிலும் மேலும் எளிய வகையில் உருவாக்கிக் கொடுப்பது என்பது ஓர் அரிய தொண்டு. அத்தகைய தொண்டினை முனைவர் மணிமேகலை அவர்கள் முனைந்து செய்துள்ள நூலே இந்நூல். இது ஒரு சுருக்கமான நன்னூல்!

ஒரு துறைக் கோவை போல இந்நூலும் ஒற்றுப்பிழை என்னும் ஒரு பிழை தவிர்க்க உதவும் கோவையாக அமைந்துள்ளது. தொடக்கத்தில்

தமிழ்மொழியின் சிறப்பினைக் கூறத் தொடங்கி இறுதியில் தமிழின் தலையாய நூற்பட்டியலில் முடியும் இந்நூல் எல்லோருக்கும் எளிய வழிகாட்டியாக அமைந்துள்ளது.

இதனை ஒற்றுப் பிழையைத் தவிர்க்கும் இலக்கண நுட்பத்தை விளக்கும் நூல் என்று கூறுவதைவிட, ஒற்றுப் பிழை நேராமல் தவிர்க்க உதவும் ஓர் அகராதி என்றே கூறலாம். அந்த அளவுக்குப் பிழை நேர வாய்ப்புள்ள இடங்கள் எல்லாம் வரிசைப்படுத்தித் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கணம் – சிறு குறிப்பு என்னும் பகுதி சுருங்கிய அளவில் ஓர் இலக்கண அறிமுகத்தை நிகழ்த்திவிடுகிறது. தவறானது – சரியானது என்னும் பகுதி ஐயத்தை உடனடியாகப் போக்கிக்கொள்ள உதவும் அகராதி போலவே அமைந்துள்ளது.

ஒற்றுப் பிழைகள் குறித்த விதிகளுக்கேற்ப அனைத்து விவரங்களும் இந்நூலாசிரியரால் கவனமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் இன்றைய தேவை என்பதில் ஐயமில்லை. அடிப்படை அறிவுள்ளவர் முதல் ஆழ்ந்து கற்ற அறிஞர் வரை கையில் வைத்துப் பயன்படுத்த வேண்டிய கையேடு இந்த நூல்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய வழிகாட்டி நூலாகவும் இந்நூல் அமைந்துள்ளது. மிகவும் முயன்று செய்திகளைத் திரட்டி இந்நூலை அளித்தமைக்காக நூலாசிரியர் முனைவர் மணிமேகலையைப் பாராட்டுவது நமது கடன்.

புலவர் **வெற்றியழகன்,** சென்னை

தமிழரின் காப்பரணாக விளங்கும் இலக்கண நூல்கள் பலவற்றுள் "தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்" என்னும் இந்நூலும் ஒன்றாகும். இந்நூலை இயற்றியவர் – நாடறிந்த நல்லறிஞர் – சங்க இலக்கியச் சாற்றைத் தமிழர் செவியில் பாய்ச்சி இன்பம் விளைவிக்கும் சிலப்பதிகார – இராவண காவிய – சீறாப் புராண – பாவேந்தத்தின் களஞ்சியமாக விளங்கிக் கொண் டிருக்கின்ற சிலம்பொலியாரின் திருமகளார் முனைவர் மணிமேகலையார் ஆக்கித் தந்திருக்கின்ற அரியதொரு செல்வம் இந்நூல்.

இந்த நூலைத் தமிழ்மொழியின் சிறப்பு என்று தொடங்கி – தமிழின் தலையாய நூல்கள் என்று ஒன்பது பெரும் பிரிவுகளைக் கொண்டு அமைத்துள்ளார் நூலாசிரியர் மணிமேகலையார்.

மணிமேகலையார் படைத்த இந்த நூலும் ஒன்பது பெரும் பகுதிகளைக் கொண்டு தொல்காப்பியம்போல் சிறக்கின்றது. தந்தை கணக்காசிரியர்; மகள் இலக்கண ஆசிரியர். இரண்டும் ஒன்றே. கணக்கும் இலக்கணமும் ஒன்றே.

இந்த நூலில் தமிழ் இலக்கணத்திற்குச் சிறு குறிப்புத் தரப்பெற்றுள்ளது. ஒற்றுப் பிழைகள் எங்கெல்லாம் ஏற்படும்; அதனை எவ்வாறு சரி செய்து கொள்ளுதல் வேண்டும்; வல்லினம் எங்கெல்லாம் மிகும்; எங்கெல்லாம் மிகா; தவறான சொல் எது? சரியான சொல் எது என்னும் விளக்கத்தினைச் சுருக்கமாகத் தந்தாலும் சுவையாகவும் – சிறப்பாகவும் எடுத்துக்காட்டியுள்ளது மிக மிகப் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இலக்கணம் கற்காமலேயே சிறுகதை, நெடுங்கதை, கட்டுரை, கவிதை என்று எழுதுவோர் இந்த நூலைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு எழுதினால், அவர் பொன்மலராகிய படைப்புகள் மணம் பெற்றுச் சிறக்கும் என்பதில் அய்யமே இல்லை.

இலக்கணப் பிழையின்றி எழுதுதல் வேண்டும் என்னும் ஆவல் கொண்டோரும்; ஒற்று எங்கு மிகும், எங்கு மிகாது எனத் தெரியாமல் தத்தளிப்போரும்; மாணவரும்; ஆசிரியரும்; கவிஞரும்; புலவர் தேர்வு மட்டும் எழுதிப் பட்டம் பெற்றுவிட்டு இலக்கணமே தெரியாமலிருப்போரும் இந்த நூலைத் துணையாகக் கொண்டாரேயானால், அவரும் தமிழில் தெளிவு பெறுவர்; தமிழும் தப்பிப் பிழைக்கும்; இந்த நூலும் அனைவர்க்கும் வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவேனும் அய்யமில்லை. இந்நூல் தமிழ் இலக்கணத்துக்கு ஓர் எளிய வழி!

முனைவர் **ய. மணிகண்டன்,** சென்னை

தமிழறிஞர்கள் பண்டுதொட்டு இன்றுவரை நல்ல தமிழில் பிழையில்லாமல் எழுத உதவும் வழிகாட்டி நூல்களைப் படைத்துள்ளனர்; படைத்து வருகின்றனர். அ.கி. பரந்தாமனார், தமிழண்ணல், பொற்கோ, மருதூர் அரங்கராசன் முதலியோர் இக்களத்தில் விதந்தோதத் தக்க சிறப்புடைய

நூல்களைப் படைத்துள்ளனர். இந்நூல்கள் அரிய நோக்கு நூல்களாக அமைந்து மொழிநலம் – நடைநலம் பேண உதவி வருகின்றன.

இச்சூழலில் அதே களத்தில் இன்னுமொரு நூலாக இந்நூல் வெளிவருகின்றது. பிழையின்றித் தமிழ் எழுத உதவும் நோக்கிலான எளிய இனிய நூலாகத் "தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்" என்னும் தலைப்பில் முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் அவர்கள் எழுதிய இந்த நூல் அமைந்துள்ளது. எளிய நடையில், எல்லோருக்கும் தெரிந்த எடுத்துக்காட்டுகளைத் தந்து, மிகத் தெளிவாக வகுத்தும் தொகுத்தும் அமைத்துக்கொண்டு இந்த நூல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. குழப்பமும் மயக்கமும் அற்ற நிலையில் மொழியைப் பயன்படுத்த உதவும் வண்ணம் விதிகள் எடுத்துரைக்கப்பட்டு இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த நூலினை உருவாக்கியுள்ள நூலாசிரியர் முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் அவர்கள் அன்புநலனும் பண்புநலனும் அறிவுநலனும் ஒருங்கு அமையப்பெற்ற உயர்குணப் பெருமாட்டி ஆவார். கொங்கு நாட்டின் பண்பாட்டுத் தொடர்பான அருமை பொருந்திய ஆய்வினை நிகழ்த்திச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவராவார். தமிழுள்ளமும் தமிழ்த் தொண்டுணர்வும் சிறக்கச் செயல்பட்டுவரும் சீர்த்திமிக்கவராவார். எங்கள் பாசத்திற்குரிய சகோதரியாராகப் பொலிகின்ற பெற்றிக்குரியவர். யாவற்றினும் மேலாக ஒட்டுமொத்த தமிழுலகமும் போற்றி வணங்கும் முதுபெரும் தமிழறிஞர், தந்தைமை நிலையில் என்போன்ற பலரையும் அன்பு பாராட்டி வளர்த்திட்ட மாமனிதர் சிலம்பொலி சு. செல்லப்பனாரின் அருந்தவப் புதல்வியாவார். அத்தகு பெருமைக்குரிய நூலாசிரியர் படைத்துள்ள இவ்வினிய நூல், தமிழுலகிற்கு நற்பயன் நல்கும் எனவும், தமிழுலகத்தாரால் போற்றப்பெறும் எனவும் நான் உறுதியாக நம்புகின்றேன்.

முனைவர் **மு. வளர்மதி,** சென்னை

இலக்கிய வளமும் இலக்கணச் செம்மையும் நிறைந்த தமிழ் மொழியினைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும், இலக்கண அறிவு இன்றியமையாதது.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற இலக்கினை அடைய முயற்சிக்கும் இக்காலத்தில் எங்கும் பிழை எதிலும் பிழை என்ற நிலை உருவாகாமல் தடுத்து

அடிப்படையான இலக்கண அறிவு அனைவரும் பெற வேண்டும் என்ற கருத்தில் தமிழறிஞர் பலரும் அதற்கான எளிய வழிமுறைகளை அறிந்து கொள்ள பல நூல்களை வெளியிட்டுள்ளனர். இவ்வரிசையில் முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் எழுதிய 'தமிழில் ஒற்றுப்பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்' என்ற இந்நூலும் இடம் பெற்றுள்ளது.

இலக்கணப் பிழைகளில் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெரிதும் மலிந்திருப்பது ஒற்றுப்பிழையாகும். அதற்குரிய இலக்கணத்தை அறிந்து இவ்வொற்றுப் பிழையை நீக்கி எழுத மாணவர் உலகிற்குப் பெரிதும் பயனுடையதாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலில் ஒற்று மிகும் இடம், மிகா இடம் என்பதை அறிந்துகொள்ளத் தேவையான அனைத்து இலக்கண விதிகளையும் குறிப்பிட்டு அதற்குரிய எடுத்துக்காட்டுகளுடன் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

நாம் காணும் பிழைகளில் மிகுதியான பிழைகள் ஒற்றுப்பிழைகளாகவே இருக்கின்றன.மேலும் வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள், வருமொழிகள் மிகும் நிலைமொழிகள், வருமொழிகள் மிகா நிலைமொழிகள் எனும் நிலையில் ஆய்ந்து நடைமுறைப் பேச்சு வழக்கு முறையில் எடுத்துக் காட்டுகளைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது பெரிதும் பாராட்டிற்குரியதாகும்.

ஆகவே இவ்வகையான பிழைகளைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைத் தெளிவாகவும், மிக எளியதாகவும் கூறுகின்ற இந்நூலை மிகக் கடினமாக முயன்று உருவாக்கியுள்ள முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகள்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும், தவறின்றித் தமிழில் எழுத விழைவோர்க்கும் இனிய எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து, பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒற்றுப் பிழைகளைத் தவிர்த்திடவும், அதன்மூலம் பிழைகளின்றிப் படைப்புகள் வெளிவரவும், ஊடகங்கள் தவறின்றிச் செய்திகளை அளித்திடவும் உதவும் இந்நூல் தமிழுக்கு ஒரு காப்பரண்.

தினமணி (16-03-2014)

(தினமணி ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதன் – இந்த வாரம் பகுதியில்)

செல்லப்பனாரின் வாரிசு முனைவர் மணிமேகலை புஷ்பராஜிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. கூடவே, 'தினமணி' நாளிதழின் முதல் பக்கமும். அந்தப் பக்கத்தில் காணப்பட்ட எழுத்துப் பிழைகள் அனைத்தையும் சுழித்து, சுட்டிக் காட்டியிருந்தார். கடிதத்தில் தனது மனக்குறையைக் கொட்டியும் தீர்த்திருந்தார். 'அண்ணா, நமது 'தினமணி' நாளிதழில் ஒற்றுப் பிழை 'வரலாமா' என்கிற நியாயமான கேள்வியை எழுப்பியிருந்தார் மணிமேகலை.

ஒற்றுப் போடுவது என்பதைக் கடுமையாக வலியுறுத்தினால், எங்கெல்லாம் ஒற்று தேவையில்லையோ அங்கெல்லாம் ஒற்றுப் போட்டுவிடுகிறார்கள். தேவையான இடத்தில் போடுவதும் இல்லை. அதனால்தான் பத்திரிகைகள் ஒற்றுப் போடுவதை வலியுறுத்தாமல் விட்டுவிடுகின்றன.

நிஜமான பிரச்னை அதுவல்ல. பத்திரிகைத் துறைக்கு வருபவர்கள் பெரும்பாலோர் தமிழைப் பாடமாக எடுத்துப் படித்தவர்களும் அல்லர். தமிழார்வத்தால் பத்திரிகைத் துறைக்கு வந்தவர்களும் அல்லர். இன்றைய பத்திரிகையாளர்களில் பலருக்கு வாசிப்புப் பழக்கம் இருக்கிறதா என்பதே சந்தேகம்தான். இது தமிழில் மட்டும்தான் என்றில்லை. ஏனைய இந்திய மொழிப் பத்திரிகைகளிலும் இதுதான் யதார்த்த நிலைமை.

இப்படிப்பட்ட சூழலில், 'ஒற்று' பற்றிக் கவலைப்பட்ட காலம் போய்விட்டது. ஒழுங்காக வாக்கிய அமைப்பு இருந்தாலே அதிர்ஷ்டம் என்றாகிவிட்டது. நமது கல்வி முறையின் தரம் குறைந்துவிட்டதன் விளைவுதான் இது.

முனைவர் மணிமேகலையைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, மேலே குறிப்பிட்ட யதார்த்தங்களை எடுத்துரைத்து, எனது மனத்திலிருந்த புழுக்கத்தைக் குறைத்துக்கொண்டேன்.

அடுத்த நாளே, மணிமேகலை புஷ்பராஜ், அவர் எழுதிய 'தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்' என்கிற புத்தகத்தை அனுப்பித் தந்தார். ஆசிரியர் குழுவினருக்கு அதைப் பரிந்துரை செய்திருக்கிறேன். முனைவர் மணிமேகலைக்கு நன்றி.

தினத்தந்தி (22-01-2014)

தமிழில் பிழை இல்லாமல் எழுத இலக்கண அறிவை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியம். அதிலும் நல்ல தமிழில் எழுத விரும்புவோர் ஒற்றுப் பிழைகளைத் தவிர்த்தல் அவசியம்.

அதற்கு வல்லினம் மிகு இடங்களையும், மிகா இடங்களையும் அறிந்து கொள்ளவேண்டும். அதற்கு மிக எளிய விதிகளை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் 'தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்' எனும் இந்த நூலில் விளக்கியுள்ளார். சிறிய நூலாக இருந்தாலும், சிறந்த நூல்.

(வெளியீடு : பாவேந்தன் நினைவு அறக்கட்டளை, 41, காவேரி சாலை, கலாசேத்திரா காலனி, பெசன்ட் நகர், சென்னை – 600 090)

தினமலர் (27-04-2014)

மூத்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனாரின் திருமகள் மணிமேகலையார் படைத்தளித்துள்ள நூல் 'தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்'.

தமிழ்மொழியின் சிறப்பில் துவங்கி, தமிழ் இலக்கணம் குறித்தும், ஒற்றுப் பிழைகள், வலி மிகுதல், வலி மிகாமை குறித்தும், தவறும் சரியும் ஆகும் சொற்கள் பற்றியும் எழுதி, தமிழின் தலையாய நூல்களையும் குறிப்பிட்டு நூல் நிறைவு பெறுகிறது.

அறிஞர் பலர் தமிழில் பிழையின்றி எழுத வழிகாட்டியுள்ளனர். அந்த வரிசையில் அண்மையில் வெளிவந்த, 'பிழையின்றித் தமிழ் பேசுவோம் எழுதுவோம்' நூலையடுத்து இந்நூல் வெளிவந்துள்ளது. நிரம்ப எடுத்துக்காட்டுகள், குழப்பம் தராத குறிப்புகள் கொண்டுள்ள இந்நூல் அருமையான அச்சு அமைப்பில் வெளிவந்துள்ளது. பாராட்டத்தக்க நல்ல முயற்சி; பயன்தரும் நல்ல நூல்.

பொதிகை மின்னல் (மே 2014)

நூல் : 'தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்'

தமிழில் ஒற்றுப்பிழைகள் இன்றி எழுதுவது என்பது கவிஞர்களுக்கே கூட இன்று கடினமாக இருக்கிறது. அந்தக் குறையைக் களைய அவர்கள்

துடித்தாலும் வழிதெரியாமல் திகைத்து நிற்கிறார்கள். அவர்களுக்கு கைகொடுக்க வந்திருக்கின்றார் இந்நூலாசிரியர் முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்.

எட்டு எளிய தலைப்புகளில் எங்கு ஒற்று வரும், வராது என்பதை விளக்கிக் கொண்டு போகும் பாங்கு மிக அருமை. வலி மிகும் இடங்கள், வலி மிகா இடங்களை அழகான எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கிக் கொண்டு போவது உன்னதம். சரியானது, தவறானது எனப் பட்டியல் போட்டுக்காட்டித் தெளிய வைக்கிறார். தமிழ் இலக்கணம் சிறுகுறிப்பு எனத் தந்து இலக்கண அறிவை ஏழே பக்கங்களில் விளக்கிவிடுகிறார்.

அனைவரின் கைகளிலும் இருக்கவேண்டிய நூல் இது. உங்கள் பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு இப்போதே அறிமுகப்படுத்தி விடுங்கள். தமிழில் அவர்கள் சிறந்து விளங்கத் துணைபுரியும். கவிஞர்கள், எழுத்தாளர்கள் கையிலேயே வைத்திருங்கள்.

நூலாசிரியர் வெளிநாடுகளில் நடைபெற்ற தமிழ் மாநாடுகளில் பேராளராய்க் கலந்துகொண்ட சிறப்பு பெற்றவர். அது மட்டுமல்ல தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனாரின் மூத்த மகள். நூல் சிறப்புறச் சொல்லவா வேண்டும்!

காலைக்கதிர் (04-05-2014)

நூல் : ‘தமிழில் ஒற்றுப் பிழையின்றி எழுத மிக எளிய விதிகள்’

தமிழ்மொழியின் சிறப்பில் துவங்கி, தமிழ் இலக்கணம் குறித்தும், ஒற்றுப்பிழைகள், வலி மிகுதல், வலி மிகாமை குறித்தும், தவறும் சரியும் ஆகும் சொற்கள் பற்றியும் எழுதி, தமிழின் தலையாய நூல்களையும் குறிப்பிட்டு நூல் நிறைவு பெறுகிறது.

அறிஞர் பலர் தமிழில் பிழையின்றி எழுத வழிகாட்டியுள்ளனர். நிரம்ப எடுத்துக்காட்டுகள், குழப்பம் தராத குறிப்புகள் கொண்டுள்ள இந்நூல் அருமையான அச்சு அமைப்பில் வெளிவந்துள்ளது. பாராட்டத்தக்க நல்ல முயற்சி; பயன்தரும் நல்ல நூல். ஒற்றுப் பிழைகளைத் தவிர்க்க சிறந்த வழிகாட்டி நூல்.

1. தமிழ் மொழியின் சிறப்பு

பகலவனிலிருந்து சிதறி விழுந்த ஒரு சிறு நெருப்புக் கோளம் கழன்று கழன்று குளிர்ந்து இந்நிலவுலகாயிற்று என்பர் அறிவியலர். விரைந்தோடும் பம்பரத்தின் நடுப்பகுதியே மற்ற பகுதியைவிட மிகுவிசையில் சுற்றும். அஃதொப்பவே பம்பரம் போற் சுழன்ற நெருப்புக் கோளத்தின் நடுப்பகுதியே முதலில் குளிர்ந்து கடினப்பட்டு உறைந்தது. இது கொண்டு உலகின் நடுக்கோட்டுப் பகுதியே முதலிற்றோன்றிய நிலப்பகுதி எனலாம். இந்நடுக்கோட்டுப் பகுதியில் இருந்து கடலில் மூழ்கிய இலெமூரியாக் கண்டமே நம் பண்டைய தமிழகம். ஆதலின் உலகில் முதன்முதலில் தோன்றிய நாடு தமிழ்நாடே! அங்குத்தான் முதல் மாந்தரினம் தோன்றியிருக்க முடியும். எனவே தமிழினமே உலகில் முதலிற்றோன்றிய மாந்தரினம். அம் மக்கள் பேசிய மொழி தமிழ் என்பதால் தமிழே ஞால முதன் மொழியாம்.

தமிழ் மொழி தொன்மை, தனித் தன்மை, பொதுமைப் பண்பு, நடுவுநிலைமை, பல மொழிகட்குத் தாய், பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமின்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, கலை இலக்கியத் தனித் தன்மை வெளிப்பாடு பங்களிப்பு, மொழிக் கோட்பாடு போன்ற சிறப்புமிக்க தகுதிகளைக் கொண்டுள்ளது.

நம் தமிழ் மொழி உலகில் பிற நாட்டவரின் தாய்மொழியாய் இருந்திருக்குமேயானால் இந்நேரம் அது உலகப் பெருமையை அடைந்திருக்கும் என்றார் பேரறிஞர் அண்ணா.

நம் மொழி ஒரே வகை ஒலிப்புடையது; உலக வழக்கு, செய்யுள் வழக்கு என இரு வகை வழக்குகளையுடையது; இயல், இசை, நாடகம் எனும் முப்பெயர் கொண்டது. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என நான்கு வகைப் பாக்களைக் கொண்டது; எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து இலக்கணம்

பெற்றது; எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை எனச் செய்யுளுறுப்புகள் ஆறு உடையது; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை எனத் திணை ஏழு கொண்டது; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எட்டு வனப்புடையது; நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, நடுவுநிலைமை என ஒன்பது சுவை பொருந்தியது; சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகுகளால் நிறைந்தது.

உலகில் மூவாயிரம் மொழிகள் இருக்கின்றன. அவற்றுள் நான்கு கோடி மக்களுக்குமேல் பேசுகின்ற மொழிகளின் எண்ணிக்கை இருபது. அந்த இருபதனுள் தமிழும் ஒன்று. உலகெங்கிலும் சுமார் அறுபது நாடுகளில் வசித்துவரும் ஏறத்தாழ ஏழு கோடி மக்களின் தாய்மொழியாகத் தமிழ் உள்ளதென்பது தமிழின் தனிச் சிறப்புகளுள் ஒன்றாம்.

மூவாயிரம் ஆண்டுகளாகச் சிறப்புடன் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்ற இனிய மொழியாய், உயர்தனிச் செம்மொழியாய், ஓர் இயற்கை மொழியாய் விளங்குவது தமிழ் மொழி.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய மூன்று நாடுகளில் தமிழும் ஆட்சிமொழியாக உள்ளது. செம்மொழித் தகுதி பெற்ற சிறப்புக் கொண்டது தமிழ்மொழி. சீனம், கிரேக்கம், சமஸ்கிருதம், ஹீப்ரு, அரேபியம், பாரசீகம், இலத்தீனம் ஆகிய ஏழு மொழிகளே செம்மொழித் தகுதியை இதற்குமுன் பெற்றவை. நம் மொழிக் குள்ள பெருமை அளவுக்குள் அடக்கிக் கூற முடியாதது. நம் மொழிக்குள்ள தொன்மை, முன்மை, தூய்மை, தாய்மை, இளமை, வளமை, இனிமை, தனிமை, செம்மை, மும்மை போன்ற சிறப்புகள் அனைத்தையும் வேற்று மொழிகள் எவையும் பெற்றிருக்கவில்லை என்பது தமிழ் மொழியின் தனிச் சிறப்பாகும்.

2. தமிழ் இலக்கணம் - சிறு குறிப்பு

தமிழ் மொழியைப் பிழையின்றியும், தவறின்றியும் பேசுவதற்கும், எழுதுவதற்கும் கருவியாக இருப்பதுவே இலக்கணம். பிறர் தவறின்றிப் புரிந்துகொள்வதற்கும், பிழையின்றிக் கருத்தைத் தெளிவாக வெளியிடுவதற்கும் துணைபுரிவது இலக்கணம்.

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டதாகும்.

எழுத்துகளின் எண், பெயர், முறை, பிறப்பு ஆகியவற்றின் தன்மைகளைக் கூறுவது எழுத்து இலக்கணமாகும்.

சொல் இலக்கணம் என்பது பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றின் தன்மைகளைக் கூறுவதாகும்.

பொருள் இலக்கணம் அகப்பொருள், புறப்பொருள் என இரண்டு வகைப்படும்.

அகப்பொருள் பிரிவுகள்

அகப்பொருள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சி	:	மலையும் மலை சார்ந்த இடமும்
முல்லை	:	காடும் காடு சார்ந்த இடமும்
மருதம்	:	வயலும் வயல் சார்ந்த இடமும்
நெய்தல்	:	கடலும் கடல் சார்ந்த இடமும்
பாலை	:	குறிஞ்சியும், முல்லையும் தம் இயல்பில் திரிந்திருத்தல்.

யாப்பிலக்கணம்

(யாப்பு - செய்யுள்)

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன செய்யுளின் உறுப்புகளாகும்

அணி இலக்கணம்

செய்யுள், உரைநடை ஆகிய இரண்டிலும் காணப்படுகின்ற சொல், பொருள்களின் அழகினை வகைப்படுத்திக் கூறுவது அணி இலக்கணம் எனப்படும்.

தமிழ் எழுத்துகள் முதல் எழுத்துகள், சார்பெழுத்துகள் என இருவகைப்படும். மொத்தம் 247 எழுத்துகள்.

உயிரெழுத்து	-	12
மெய்யெழுத்து	-	18
உயிர்மெய் எழுத்து	-	12 x 18 = 216
ஆய்த எழுத்து	-	1
மொத்தம்	-	247

மாத்திரை

ஒவ்வோர் எழுத்தையும் ஒலிக்கும் கால அளவிற்கு மாத்திரை என்பது பெயராகும். இயல்பாகக் கண் இமைப்பதும், கை நொடிப்பதும் ஒரு மாத்திரை எனக் கூறுவர்.

உயிர்க் குறில்	-	1 மாத்திரை
உயிர்மெய்க் குறில்	-	1 மாத்திரை
உயிர் நெடில்	-	2 மாத்திரை
உயிர்மெய் நெடில்	-	2 மாத்திரை
மெய் எழுத்து	-	½ மாத்திரை
குற்றியலுகரம்	-	½ மாத்திரை
குற்றியலிகரம்	-	½ மாத்திரை

ஆய்த எழுத்து	-	*½ மாத்திரை*
உயிரளபெடை	-	*3 மாத்திரை*
ஐகாரக் குறுக்கம்	-	*1 மாத்திரை*
ஔகாரக் குறுக்கம்	-	*1 மாத்திரை*
ஒற்றளபெடை	-	*1 மாத்திரை*
மகரக் குறுக்கம்	-	*¼ மாத்திரை*
ஆய்தக் குறுக்கம்	-	*¼ மாத்திரை*

உயிரெழுத்து

மொழிக்கு உயிராகத் திகழ்பவை. 'அ' முதல் 'ஔ' முடிய 12 எழுத்துகள். அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குறுகி ஒலிப்பதனால் குற்றெழுத்து எனப்படும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் நீண்டு ஒலிப்பதனால் நெட்டெழுத்து எனப்படும்.

சுட்டெழுத்து

அ, இ, உ என்னும் மூன்று எழுத்துகளும் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும் வகையில் சொல்லின் முதலில் வந்தால், அவை சுட்டெழுத்துகள் எனப்படும்.

மெய்யெழுத்து

இவை 18 ஆகும். வல்லினம், மெல்லினம், இடையினம் என மெய்யெழுத்து மூன்று வகைப்படும்.

க் ச் ட் த் ப் ற் - வல்லின மெய்

ங் ஞ் ண் ந் ம் ன் - மெல்லின மெய்

ய் ர் ல் வ் ழ் ள் - இடையின மெய்

உயிர்மெய் எழுத்து

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து பிறப்பது உயிர்மெய் எழுத்தாகும். இவ்வாறு 18 மெய்யெழுத்துகளும், 12 உயிரெழுத்து களுடன் சேர்ந்து 216 உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன.

குற்றியலுகரம்

வன்தொடர்க் குற்றியலுகரம்

எடுத்துக்காட்டு (எ. கா.) - விளக்கு, தச்சு, பட்டு, முத்து, உப்பு, காற்று ஆகியன வன்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

குரங்கு, மஞ்சு, கூண்டு, மருந்து, இரும்பு, கன்று இவை யனைத்தும் மென்தொடர்க் குற்றியலுகரங்களே!

எய்து, சார்பு, சால்பு, போழ்து ஆகியன இடைத்தொடர்க் குற்றியலுகரங்கள்.

முற்றியலுகரம்

குற்றியலுகரங்கள் தவிர்த்த அனைத்தையும் முற்றியலுகரங்கள் என்று கூறிடலாம்.

புணர்ச்சி

ஒரு சொல்லோடு இன்னொரு சொல்லோ உருபோ வந்து சேரும்பொழுது, இடையில் ஏற்படும் மாற்றங்களை 'புணர்ச்சி' என்கிறோம். முதலில் நிற்கும் சொல்லை 'நிலைமொழி' என்றும், வந்து இணையும் சொல்லை 'வருமொழி' என்றும் கூறுவர்.

சொல்

ஓர் எழுத்து தனித்து நின்றோ இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்றோ பொருளை உணர்த்துவது சொல். சொற்களைப் பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்று நான்காகப் பிரிக்கலாம்.

பெயர்ச் சொல்

ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். அது திணை, பால், எண், இடம், காலம், வேற்றுமைகளை ஏற்று வரும்.

திணை : இரண்டு பிரிவுகள் - உயர்திணை, அஃறிணை

பால் : இது 5 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆண்பால், பெண்பால், பலர்பால் (உயர்திணை) ஒன்றன்பால், பலவின்பால் (அஃறிணை)

எண் : இது ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

இடம் : இது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

தன்மை - நான், யான், நாங்கள், யாம்

முன்னிலை - நீ, நீர், நீங்கள்

படர்க்கை - அவன், அவள், அவர், அது, அவை

இவை அனைத்துக்கும் பொதுப்பெயர்கள் தான், தாம், எல்லாம்.

காலம் : இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனக் காலம் மூன்றாகும்.

வேற்றுமை

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும். வேற்றுமை எட்டு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

முதல் வேற்றுமை	-	எழுவாய். இதற்கு உருபு இல்லை. பெயரே உருபு.
இரண்டாம் வேற்றுமை	-	உருபு : ஐ
மூன்றாம் வேற்றுமை	-	உருபுகள் : ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன், கொண்டு
நான்காம் வேற்றுமை	-	உருபு : கு
ஐந்தாம் வேற்றுமை	-	உருபுகள் : இல், இன்.
ஆறாம் வேற்றுமை	-	உருபுகள் : அது, உடைய
ஏழாம் வேற்றுமை	-	உருபு : கண்

எட்டாம் வேற்றுமை	-	விளிப் பொருளில் வருவது. உருபு இல்லை.

வாக்கியங்களில் வேற்றுமை உருபு விரிந்து அல்லது மறைந்து வரும். வேற்றுமை உருபு விரிந்து வருதல் வேற்றுவை விரியாகும். வேற்றுமை உருபு மறைந்து வருதல் வேற்றுமைத் தொகையாகும்.

வேற்றுமை விரி	**வேற்றுமைத் தொகை**
பாலைக் குடி	பால் குடி
தலையால் வணங்கினான்	தலை வணங்கினான்
சேரனுக்குத் தம்பி	சேரன் தம்பி
மலையின் வீழ் அருவி	மலை வீழ் அருவி
மன்னரது வாள்	மன்னர் வாள்
வீட்டின் கண் சென்றான்	வீடு சென்றான்

வினைச்சொல்

ஒரு பொருளின் தொழில் நிகழ்ச்சியை உணர்த்தும் சொல் வினைச்சொல் ஆகும். அது காலத்தைக் காட்டும். ஆனால் வேற்றுமை உருபை ஏற்காது. இது தெரிநிலை வினை, குறிப்பு வினை என இருவகைப்படும்.

வினைச்சொல் வகைகள்

வினைச் சொல் முற்றுவினை, எச்சவினை என இரு வகைப்படும். பொருள் முற்றி நிற்பது முற்று வினையாகும்.

(எ-டு) மரம் சாய்ந்தது - தெரிநிலை வினைமுற்று

மரம் பெரியது - குறிப்பு வினை முற்று

பொருள் முழுமை பெறாமல் எஞ்சியிருப்பது எச்ச வினை யாகும். எச்சம் பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

(எ-டு) சென்ற மனிதன் - இதில் 'சென்ற' என்பது முற்றுப் பெறாத எச்சச் சொல். மனிதன் என்னும் பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்பதால் பெயரெச்சம். இவை முக்காலங்களிலும் வரும்.

(எ-டு) சென்று வந்தேன் - இதில் 'சென்று' என்பது எச்சச் சொல். வந்தேன் என்னும் வினைமுற்றைத் தழுவுவதனால் இது வினையெச்சம்.

எதிர்மறைப் பெயரெச்சம்

(எ-டு)

விளையாத பயிர்

வரம் வேண்டாத தவம்

படிக்காத மேதை

வாடாத செடி

இந்தத் தொடர்களிலுள்ள 'விளையாத, வேண்டாத, படிக் காத, வாடாத' என்னும் சொற்கள் பெயரெச்சங்கள். இருப்பினும் அவை எதிர்மறைப் பொருளைத் தருவதனால் அவற்றை 'எதிர்மறைப் பெயரெச்சங்கள்' எனக் கூறுவர்.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(எ-டு)

விளையாப் பயிர்

வரம் வேண்டாத் தவம்

படிக்கா மேதை

வாடாச் செடி

இங்கு நிலை மொழிகளில் 'த' என்ற ஈற்றெழுத்து இன்றி அமைந்துள்ளது. இவ்வாறு ஈற்று எழுத்து 'த' இல்லாமல் வரும் எதிர்மறைப் பெயரெச்சங்களை 'ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்' என்று வழங்குவர்.

வியங்கோள் வினைமுற்று

மரியாதையுடன் ஏவுதல் வியங்கோள் வினைமுற்று ஆகும்.

(எ-டு) வாழ்க.

இடைச்சொல்

தனித்து வராமல் பெயர்ச் சொல், வினைச் சொல் ஆகிய வற்றைச் சார்ந்து வருவது இடைச்சொல் ஆகும்.

அவை யாவன :

வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், சாரியைகள், உவம உருபுகள், ஏ, ஓ, என, என்று, உம், மற்று, மற்றை, கொல், மா, யா, கா, பிற, அந்தோ, ஐயோ.

உரிச்சொல்

பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் விட்டு நீங்காமல் செய்யுளுக்கு உரிமை பூண்டு வரும் சொல் உரிச்சொல்லாகும்.

(எ-டு.) சால, நனி, கழி, தவ, கூர் - இவை 'மிகுதி' என்னும் ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள். இவை அனைத்தும் 'மிகுதி' என்ற ஒரே பொருளைத்தான் தருகின்றன.

(எ-டு.) சாலவும் நன்று

நனி நாகரிகர்

அருள் கூர்ந்து

கழி நகை

பல குணம் தழுவிய ஓர் உரிச் சொல்

'கடி' என்ற ஒரே சொல் இடத்திற்கேற்றவாறு வெவ்வேறு பொருளில் வருவதனால், இது பல குணம் தழுவிய ஓர் உரிச் சொல் எனப் பெயர் பெற்றது.

கடி மலர்	-	வாசனை உள்ள மலர்
கடி வாள்	-	கூர்மை உள்ள வாள்
கடி நகர்	-	காவல் பொருந்திய நகர்
கடி முரசு	-	ஒலிக்கும் முரசு
கடி மிளகு	-	காரமான மிளகு

3. ஒற்றுப் பிழைகள்

தமிழில் வெளிவருகின்ற நூல்களிலும், நாளிதழ்களிலும், விளம்பரப் பலகைகளிலும் பிற மொழிக் கலப்பில்லாத மற்றும் பிழைகள் இல்லாத தமிழ்ப் படைப்புகளைக் காண்பது அரிதாக உள்ளது. தமிழில் வெளிவருகின்ற சிறப்பு மலர்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் போன்ற வற்றிலும் பிழைகள் காணப்படுகின்றன.

ஒற்றுப் பிழை (சந்திப் பிழை), சொற்பிழை, எழுத்துப் பிழை, வாக்கியப் பிழை, தொடர்ப் பிழை, கருத்துப் பிழை, பிற மொழிக் கலப்புப் பிழை, குறியீடுகள் பிழை, புணர்ச்சிப் பிழை, மரபுப் பிழை, யாப்புப் பிழை எனப் பிழைகள் பலவகைப்படும்.

இவற்றுள் ஒற்றுப் பிழைகள் முக்கியமானதாகக் கருதப்படு கின்றன. தமிழ் நூல்கள், நாளிதழ்கள், மாத, வார இதழ்கள் மற்றும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள், விளம்பரப் பலகைகள், இரயில் நிலைய அறிவிப்புப் பலகைகள் போன்றவற்றில் ஒற்றுப் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. பிழையில்லாமல் நல்ல தமிழில் எழுத விரும்புவோர் ஒற்றுப் பிழைகளைத் தவிர்த்தல் மிகவும் அவசியமாகும். வலி மிகும் இடங்களையும், வலி மிகா இடங்களையும் அறிந்துகொள்வதனால் ஒற்றுப் பிழைகளைத் தவிர்க்கலாம்.

வல்லெழுத்து மிகுந்து வருவதனையே இலக்கணத்தில் ‘வலி மிகுதல்’ என்பர். வலி மிக வேண்டிய இடத்தில் வலி மிகாமலும், வலி மிகாத இடத்தில் வலி மிகுந்தும் இருப்பது தவிர்க்கப்படுதல் வேண்டும்.

இரண்டு சொற்கள் இணையும்போது இடையில் க், ச், த், ப் ஆகிய ஒற்றெழுத்துகளுள் ஏதாவதொன்று வந்து இரு சொற்களை யும் ஒன்றுசேர்த்தால் அதற்கு ‘வலி மிகுதல்’ என்று பெயர்.

சொற்களில் பொருள் வேறுபாடு தெரிவதற்கும், பொருளைத் தெளிவாகவும், சரியாகவும், பொருத்தமாகவும் உணர்வதற்கும், உரிய அழுத்தத்துடன் உச்சரிக்கும்போது தமிழ் மொழிக்கே உரிய இனிய ஓசை நயத்தை வெளிப்படுத்துவதற்கும் உதவுவதற்காக எழுதப்பெற்ற இலக்கணமே வல்லினம் மிகுதல் ஆகும்.

இலக்கணம் படிக்காதவர்களும், தமிழ் ஆர்வலர்களும், தமிழ் மாணவர்களும் மிக எளிதாக வல்லெழுத்து மிகுதலை அறிந்து கொண்டு பிழையின்றித் தமிழில் எழுத, விதிமுறைகளைத் தெளிவாக அறிந்துகொள்வது மிகவும் அவசியம். அந்த நோக்கத் துடன் வல்லெழுத்து மிகும் இடங்கள், மிகா இடங்கள் பற்றி மிக எளிமையாகவும், அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகை யிலும் எளிய விதிகள் இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன.

'ஒற்று' படு(த்து)ம் பாடு

தேர்வெழுதிவிட்டு வந்த மாணவன் ஆசிரியரிடம் கூறினான்: "எங்கெல்லாம் ஒற்று வரவேண்டும், வரக் கூடாது என்பதில் மிகவும் குழப்பமாக இருந்ததால் எல்லா இடங்களிலும் ஒற்றெழுத்துகளைப் போட்டே எழுதி விட்டேன். நீங்கள் வேண்டாத இடத்தில் அடித்துவிட்டு, வேண்டும் இடத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அதற்காக மதிப்பெண்களைக் குறைத்து விடாதீர்கள்." இதுதான் தற்போது 'ஒற்று' படும் பாடு.

'காலை தூக்க மாத்திரை சாப்பிட்டார்' என்பதற்கும், 'காலைத் தூக்க மாத்திரை சாப்பிட்டார்' என்பதற்கும் உள்ள பொருள் வேறுபாடு 'ஒற்று' படுத்தும்பாடுதான்.

"ஐயா! இதெல்லாம் தேவையா?"; "இந்த ஒற்றுகளைப் போடாமல் எழுதினால் என்ன?" – இவ்வாறு பலர் கேட்கின்றனர். நாள், வார, மாத இதழ்களிலும் தொலைக்காட்சிகளிலும் ஒற்றுப் பிழைகள் இருப்பதைப் பற்றிப் பலரும் வருத்தப்படுவதில்லை. பிற மொழிச் சொற்களும் ஒற்றுப் பிழைகளும் இணைந்து தமிழ் மொழியைப் பெரிதும் சிதைக்க முனைகின்றன. ஒற்றுப் பிழைகளைத் தவிர்ப்போம்! தமிழைக் காப்போம்!!

4. வலி மிகுதல் - விதிகள்

வல்லெழுத்துகள் ஆறனுள் ட, ற என்பன மொழிக்கு முதலில் வாரா. க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லின மெய்யெழுத்துகள் எனப்படும். தமிழில் மெய்யெழுத்துகள் மொழிக்கு முதலில் வாரா. மெய் யெழுத்துகளுள் சில உயிரெழுத்துகளுடன் சேர்ந்து உயிர்மெய் யெழுத்துகளாக நின்றே மொழிக்கு முதலில் நிற்கும்.

வல்லின மெய்யெழுத்துகள் ஆறனுள் க், ச், த், ப் ஆகிய நான்கு மெய்களும் பன்னிரண்டு உயிரெழுத்துகளுடன் கலந்து, உயிர் மெய்யெழுத்துகளாக நின்று மொழிகளுக்கு முன்னே வரும். இவ்வாறு மொழிக்கு முதலில் நிற்கும் வல்லெழுத்துகள் நிலை மொழிகளுடன் புணருங்கால் எவ்வெவ்விடங்களில் மிகும் என்பதற்கான முக்கிய விதிகள் பின்கண்டவாறு கொடுக்கப்பட் டுள்ளன. முதலில் நிற்கும் மொழி நிலைமொழியாகும். நிலை மொழியுடன் வந்து புணரும் மொழி வருமொழி எனப்படும்.

விதிகள்

1) அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும், எ என்னும் வினா எழுத்தின் பின்னும் க, ச, த, ப வருமொழியின் முதலாக வரின் வலி மிகும். ‘க’ என்றால் ‘க’ முதல் ‘கௌ’ வரையிலுள்ள எழுத்துகளைக் கொள்ளவேண்டும். இவ்வாறே ச, த, ப என்னும் எழுத்துகளுக்கும் கொள்ளுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டு

அ + குதிரை = அக்குதிரை

அ + செய்தி = அச்செய்தி

அ + தெரு = அத்தெரு

அ + பொருள் = அப்பொருள்

அ + காளை = அக்காளை

இ + கதவு = இக்கதவு

இ + சிலை = இச்சிலை

இ + தலை = இத்தலை

இ + புகழ் = இப்புகழ்

இ + செய்தி = இச்செய்தி

இ + பருவம் = இப்பருவம்

உ + பக்கம் = உப்பக்கம்

உ + காடு = உக்காடு

உ + பால் = உப்பால்

உ + சோலை = உச்சோலை

எ + கேள்வி = எக்கேள்வி

எ + கடவுள் = எக்கடவுள்

எ + சொல் = எச்சொல்

எ + தலைவர் = எத்தலைவர்

எ + புலவர் = எப்புலவர்

எ + பக்கம் = எப்பக்கம்

2) அந்த, இந்த, எந்த ஆகிய சுட்டு வினாச்சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

அந்த + காலம் = அந்தக் காலம்

அந்த + செய்தி = அந்தச் செய்தி

அந்த + பணம் = அந்தப் பணம்

அந்த + கை = அந்தக் கை

அந்த + தெய்வம் = அந்தத் தெய்வம்

இந்த + தரை = இந்தத் தரை

இந்த + பொருள் = இந்தப் பொருள்

இந்த + கேள்வி = இந்தக் கேள்வி

இந்த + காலம் = இந்தக் காலம்

இந்த + சிறை = இந்தச் சிறை

எந்த + சொல் = எந்தச் சொல்

எந்த + கயவன் = எந்தக் கயவன்

எந்த + தலை = எந்தத் தலை

எந்த + பணம் = எந்தப் பணம்

எந்த + பக்கம் = எந்தப் பக்கம்

3) அங்கு, இங்கு, எங்கு ஆகிய இடப்பொருள் குறிக்கும் சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

அங்கு + கண்டேன் = அங்குக் கண்டேன்

அங்கு + குடியிருந்தாள் = அங்குக் குடியிருந்தாள்

இங்கு + சேர்த்தேன் = இங்குச் சேர்த்தேன்

இங்கு + கண்டேன் = இங்குக் கண்டேன்

எங்கு + போனான் = எங்குப் போனான்

எங்கு + தேடினார் = எங்குத் தேடினார்

4) ஆங்கு, ஈங்கு, யாங்கு ஆகிய இடப்பொருள் குறிக்கும் சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

ஆங்கு + தேடினேன் = ஆங்குத் தேடினேன்

ஆங்கு + கண்டேன் = ஆங்குக் கண்டேன்

ஈங்கு + சாப்பிடு = ஈங்குச் சாப்பிடு

ஈங்கு + பார்த்தேன் = ஈங்குப் பார்த்தேன்

யாங்கு + சென்றீர் = யாங்குச் சென்றீர்

யாங்கு + கண்டீர் = யாங்குக் கண்டீர்?

5) அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

அப்படி + செய் = அப்படிச் செய்

அப்படி + பேசு = அப்படிப் பேசு

அப்படி + கொடுத்தான் = அப்படிக் கொடுத்தான்

இப்படி + பார் = இப்படிப் பார்

இப்படி + சொல் = இப்படிச் சொல்

இப்படி + சொன்னான் = இப்படிச் சொன்னான்

எப்படி + பாடினர் = எப்படிப் பாடினர்?

எப்படி + கொடுத்தாள் = எப்படிக் கொடுத்தாள்?

எப்படி + பேசினான் = எப்படிப் பேசினான்?

6) ஆண்டு (இடம்), ஈண்டு, யாண்டு என்னும் சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

ஆண்டு + காண் = ஆண்டுக் காண்

ஆண்டு + சென்றேன் = ஆண்டுச் சென்றேன்

ஈண்டு + கேள் = ஈண்டுக் கேள்

ஈண்டு + கொடுத்தேன் = ஈண்டுக் கொடுத்தேன்

யாண்டு + போனாய்? = யாண்டுப் போனாய்?

யாண்டு - கொடுப்பார் = யாண்டுக் கொடுப்பார்

7) அவ்வகை, இவ்வகை, எவ்வகை ஆகிய சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

அவ்வகை + செடி = அவ்வகைச் செடி

அவ்வகை + துணிகள் = அவ்வகைத் துணிகள்

இவ்வகை + பூக்கள் = இவ்வகைப் பூக்கள்

இவ்வகை + காவல் = இவ்வகைக் காவல்

எவ்வகை + கொடி = எவ்வகைக் கொடி

எவ்வகை + பிடிப்பு = எவ்வகைப் பிடிப்பு?

8) அத்துணை, இத்துணை, எத்துணை ஆகிய சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

அத்துணை + பெரிய = அத்துணைப் பெரிய

அத்துணை + பாடல்கள் = அத்துணைப் பாடல்கள்

இத்துணை + சிறிய = இத்துணைச் சிறிய

இத்துணை + காளைகள் = இத்துணைக் காளைகள்

எத்துணை + படங்கள் = எத்துணைப் படங்கள்

எத்துணை + காட்சிகள் = எத்துணைக் காட்சிகள்

9) 'இனி' என்னும் இடைச்சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

இனி + காண்போம் = இனிக் காண்போம்

இனி + தருவது = இனித் தருவது

இனி + பாட மாட்டேன் = இனிப் பாட மாட்டேன்

இனி + செய்யாதே = இனிச் செய்யாதே

இனி + செய்வது = இனிச் செய்வது

10) 'தனி' என்னும் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

தனி + சிறப்பு = தனிச்சிறப்பு

தனி + பிறவி = தனிப்பிறவி

தனி + கேள்வி = தனிக் கேள்வி

தனி + குடித்தனம் = தனிக் குடித்தனம்

தனி + பண்பு = தனிப் பண்பு

11) அன்றி, இன்றி என்னும் எச்சச்சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும். அதாவது இந்த இகர ஈற்றுச் சொல்லுருபுகளின் பின் வலி மிகும்.

எ-டு.

அன்றி - செருப்பு அணிந்தோரன்றிப் பிறர் நடக்கக் கூடாது.

அன்றி - கேள்வி கேட்கும் மாணவனன்றிப் பிற மாணவர் பேசக் கூடாது.

இன்றி - வெளியில் தடையின்றிச் செல்லலாம்.

இன்றி - இந்த வீட்டில் வருத்தமின்றித் தங்கலாம்.

இன்றி - பையின்றிப் போக மாட்டான்.

12) மற்று, மற்றை என்னும் இடைச்சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

மற்றை + குழந்தைகள் = மற்றைக் குழந்தைகள்

மற்று + சிலவற்றை = மற்றுச் சிலவற்றை

மற்று + பலவற்றை = மற்றுப் பலவற்றை

மற்றை + பெரியோர் = மற்றைப் பெரியோர்

மற்று + பற்று = மற்றுப் பற்று

மற்றை + செயல் = மற்றைச் செயல்

13) ‘என’ என்னும் இடைச்சொல்லின் (அகர ஈற்றுச் சொல்லுருபின்) பின் வலி மிகும்.

எ-டு.

விவசாயிகளின் வளர்ச்சிக்கெனப் பல நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

அங்குப் போகாதே எனச் சொன்னார்.

கோயிலுக்குச் செல்லும் வழி எது எனக் கேட்டேன்.

14) ‘மிக’ என்னும் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

மிக + பெரிய மகான் = மிகப் பெரிய மகான்

மிக + சிறிய பையன் = மிகச் சிறிய பையன்

15) ‘நடு’ என்னும் முற்றுகரச் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

நடு + தெரு = நடுத் தெரு

நடு + கடல் = நடுக் கடல்

நடு + பெயர் = நடுப் பெயர்

16) ‘பொது’ என்னும் முற்றுகரச் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

பொது + கூட்டம் = பொதுக் கூட்டம்

பொது + திண்ணை = பொதுத் திண்ணை

பொது + பந்தல் = பொதுப் பந்தல்

17) ‘முழு’ என்னும் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

முழு + பக்கம் = முழுப் பக்கம்

முழு + கைச்சட்டை = முழுக் கைச் சட்டை

18) ‘திரு’ என்னும் முற்றுகரச் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

திரு + கல்யாணம் = திருக் கல்யாணம்

திரு + தலம் = திருத் தலம்

திரு + குளம் = திருக் குளம்

19) ‘புது’ என்னும் முற்றுகரச் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

புது + கண்ணாடி = புதுக் கண்ணாடி

புது + புடைவை = புதுப் புடைவை

புது + துணி = புதுத் துணி

20) உயிரெழுத்தில் முடியும் 'அரை', 'பாதி' என்னும் சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

அரை + பங்கு = அரைப் பங்கு

அரை + புள்ளி = அரைப் புள்ளி

அரை + பக்கம் = அரைப் பக்கம்

அரை + சம்பளம் = அரைச் சம்பளம்

அரை + கிணறு = அரைக் கிணறு

பாதி + கிணறு = பாதிக் கிணறு

பாதி + காடு = பாதிக் காடு

பாதி + தோட்டம் = பாதித் தோட்டம்

பாதி + போர்வை = பாதிப் போர்வை

பாதி + செல்வம் = பாதிச் செல்வம்

21) எட்டு, பத்து என்னும் எண்களின் பின் வலி மிகும். ஒன்று முதல் பத்து வரையிலான எண்ணுப் பெயர்களுள் எட்டு, பத்து ஆகிய இரண்டின் பின் மட்டுமே வலி மிகும்.

எ-டு.

எட்டு + தொகை = எட்டுத் தொகை

எட்டு + கேள்விகள் = எட்டுக் கேள்விகள்

பத்து + பாட்டு = பத்துப் பாட்டு

பத்து + செடிகள் = பத்துச் செடிகள்

22) 'அணு' எனும் சொல்லின் பின் வலி மிகும்.

எ-டு.

அணு + பார்வை = அணுப் பார்வை

அணு + கோட்டம் = அணுக்கோட்டம்

23) முன்னர், பின்னர் எனும் சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

எனக்கு முன்னர்ப் பேசியவர் சிறப்பாக உரையாற்றினார்.

முன்னர் + கண்டேன் = முன்னர்க் கண்டேன்

முன்னர் + சென்றுள்ளேன் = முன்னர்ச் சென்றுள்ளேன்

பின்னர் + தேற்றினான் = பின்னர்த் தேற்றினான்

பின்னர் + பேசுவேன் = பின்னர்ப் பேசுவேன்

பின்னர் + பார்ப்போம் = பின்னர்ப் பார்ப்போம்

சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் கூச்சலுக்குப் பின்னர்ப் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

24) ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வலி மிகும். அதாவது அனைத்து ஓரெழுத்துச் சொற்களின் பின்னும் வலி மிகும். (தனி நெடிலுடன் புணரும் வல்லினம் உட்பட)

எ-டு.

ஈ + கால் = ஈக்கால்

பூ + பறித்தான் = பூப் பறித்தான்

தீ + குணம் = தீக்குணம்

தீ + செயல் = தீச்செயல்

தீ + தெய்வம் = தீத்தெய்வம்

தீ + பண்பு = தீப்பண்பு

தீ + பிடித்தது = தீப் பிடித்தது

கை + குழந்தை = கைக் குழந்தை

பூ + பந்தல் = பூப் பந்தல்

தை + பொங்கல் = தைப் பொங்கல்

பா + சுவடி = பாச்சுவடி

நா + குழறியது = நாக் குழறியது

25) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலி மிகும்.

எ-டு.

கூவா + குயில் = கூவாக் குயில்

அறியா + பிள்ளை = அறியாப் பிள்ளை

வேண்டா + தவம் = வேண்டாத் தவம்

காணா + காட்சி = காணாக் காட்சி

சொல்லா + சொல் = சொல்லாச் சொல்

நிலையா + பொருள் = நிலையாப் பொருள்

தீரா + துன்பம் = தீராத் துன்பம்

வாரா + செல்வம் = வாராச் செல்வம்

26) சொற்கள் க்கு, ச்சு, த்து, ட்டு, ப்பு, ற்று என முடிந்திருந்தால், அச் சொற்களை வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் என்பர். மக்கு, தச்சு, செத்து, விட்டு, உப்பு, கற்று ஆகிய இவை வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள்.

இத்தகைய சொற்கள் நிலைமொழியாக இருந்து வருமொழி முதலில் க, ச, த, ப (முறையே கௌ, சௌ, தௌ, பௌ வரையிலுள்ள எழுத்துகள்) என்னும் எழுத்துகள் வந்தால் வலி மிகும். அதாவது வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

எ-டு.

மக்கு + பையன் = மக்குப் பையன்

தச்சு + தொழில் = தச்சுத் தொழில்

விட்டு + சென்றார் = விட்டுச் சென்றார்

செத்து + பிழைத்தான் = செத்துப் பிழைத்தான்

உப்பு + கடை = உப்புக் கடை

கற்று + கொடுத்தார் = கற்றுக் கொடுத்தார்

பத்து + பாட்டு = பத்துப் பாட்டு

எட்டு + தொகை = எட்டுத் தொகை

எதிர்த்து + பேசினார் = எதிர்த்துப் பேசினார்

விற்று + சென்றான் = விற்றுச் சென்றான்

கேட்டு + கொண்டான் = கேட்டுக் கொண்டான்

கேட்டு + செய்தான் = கேட்டுச் செய்தான்

மீட்டு + தந்த = மீட்டுத் தந்த

பாட்டு + பாடு = பாட்டுப் பாடு

27) அகர ஈற்று வினையெச்சத்துடன் புணரும் வல்லினம் மிகும்.

எ-டு.

பெய + கண்டும் - பெயக் கண்டும்

வர + செய்து = வரச் செய்து

தர + தகும் = தரத் தகும்

செய + பெற்று = செயப் பெற்று

வர + சொன்னார் = வரச் சொன்னார்

வர + கூறினார் = வரக் கூறினார்

தேட + போனார் = தேடப் போனார்

பார்க்க + தவறினார் = பார்க்கத் தவறினார்

பாட + கேட்டேன் = பாடக் கேட்டேன்

மெல்ல + பேசினர் = மெல்லப் பேசினர்

28) இகர ஈற்று வினையெச்சத்தின் பின் வலி மிகும். அதாவது இகர விகுதி கொண்டு முடியும் வினையெச்சங்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

எ-டு.

ஓடி + போனான் = ஓடிப் போனான்

கூறி + சென்றான் = கூறிச் சென்றான்

வாடி + போயிற்று = வாடிப் போயிற்று

பேசி + பார்த்தான் = பேசிப் பார்த்தான்

போற்றி + பாடுவார் = போற்றிப் பாடுவார்

29) ஆய், போய் எனும் எச்சச் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

எ-டு.

போய் + சொன்னார் = போய்ச் சொன்னார்

போய் + தேடினார் = போய்த் தேடினார்

சொன்னதாய் + சொல் = சொன்னதாய்ச் சொல்

ஒழுங்காய் + படி = ஒழுங்காய்ப் படி

மெதுவாய் + காட்டு = மெதுவாய்க் காட்டு

வந்ததாய் + கூறு = வந்ததாய்க் கூறு

மகிழ்ச்சியாய் + பேசினர் = மகிழ்ச்சியாய்ப் பேசினர்

30) இரண்டாம் வேற்றுமை விரியில் வலி மிகும். இரண்டாம் வேற்றுமை உருபு – ஐ – நிலைமொழியில் வெளிப்பட்டு (விரிந்து) நிற்கும்.

எ-டு.

கதிரவனை + கண்டேன் = கதிரவனைக் கண்டேன்

பசுவை + கட்டினான் = பசுவைக் கட்டினான்

பொருளை + தந்தான் = பொருளைத் தந்தான்

செய்யுளை + படி = செய்யுளைப் படி

கெட்டதை + செய்யாதே = கெட்டதைச் செய்யாதே

சீதையை + காண்பேன் = சீதையைக் காண்பேன்

தொழிலை + செய்தான் = தொழிலைச் செய்தான்

31) நான்காம் வேற்றுமை விரியில் வலி மிகும். நான்காம் வேற்றுமை உருபு – கு – நிலைமொழியில் வெளிப்பட்டு (விரிந்து) நிற்கும்.

எ-டு.

வீட்டுக்கு + போனான் = வீட்டுக்குப் போனான்

அறிஞருக்கு + பொன்னாடை = அறிஞருக்குப் பொன்னாடை

பெண்ணுக்கு + கொடுத்தான் = பெண்ணுக்குக் கொடுத்தான்

நாட்டுக்கு + சேவை செய் = நாட்டுக்குச் சேவை செய்

கடைக்கு + போ = கடைக்குப் போ

மாட்டுக்கு + பிண்ணாக்கு = மாட்டுக்குப் பிண்ணாக்கு

அவனுக்கு + தெரியும் = அவனுக்குத் தெரியும்

32) அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். இவற்றுள் நான்காம் வேற்றுமை உருபு 'கு' நிலைமொழியில் வெளிப்படு கிறது.

எ-டு.

அதற்குக் கொஞ்சமும் குறைந்ததன்று.

இதற்குச் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை.

எதற்குக் கேட்கிறாய் வரி?

33) வேற்றுமைத் தொகையில் வலி மிகுதல்.

ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணை யாக இருப்பின் வலி மிகும். ஆறாம் வேற்றுமை உருபு அது.

எ-டு.

புலி + தோல் = புலித்தோல்

புலியினது தோல். 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது. எனவே ஆறாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகுந்தது.

எ-டு.

குருவி + தலை = குருவித் தலை (குருவியினது தலை)

பூனை + கால் = பூனைக் கால் (பூனையினது கால்)

தேர் + தட்டு = தேர்த்தட்டு (தேரினது தட்டு)

பூனை + கண் = பூனைக் கண் (பூனையினது கண்)

புலி + தலை = புலித் தலை (புலியினது தலை)

குதிரை + சேணம் = குதிரைச் சேணம் (குதிரையினது சேணம்)

தலை + தோற்றம் = தலைத் தோற்றம் (தலையினது தோற்றம்)

கங்கை + கரை = கங்கைக் கரை (கங்கையினது கரை)

ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாக இருந்தால் மட்டுமே வலி மிகும். நிலைமொழி உயர்திணையாக இருந்தால் வலி மிகாது.

எ-டு.

சான்றோர் + பேரவை = சான்றோர் பேரவை

புலவர் + கூட்டம் = புலவர் கூட்டம்

மறவர் + குடில் = மறவர் குடில்

எனவே ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின் வலி மிகும். நிலைமொழி உயர்திணையாயின் வலி மிகாது.

34) உடன் தொக்க தொகையில் ஒற்று

ஆறாம் வேற்றுமையில் உருபும் பயனும் உடன்தொக்க தொகை அமையாது. மற்ற 2, 3, 4, 5, 7 வேற்றுமைகளில் உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளில் வலி மிகும்.

(அ) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

எ-டு.

கஞ்சி + தொட்டி = கஞ்சித் தொட்டி (கஞ்சியை ஊற்றி வைத்திருக்கும் தொட்டி.)

வெற்றி + திருமகன் = வெற்றித் திருமகன் (வெற்றியைப் பெற்ற திருமகன்.)

எலி + கூண்டு = எலிக் கூண்டு (எலியை அடைக்கும் கூண்டு.)

அரிசி + பானை = அரிசிப் பானை (அரிசியை வைத்துள்ள பானை.)

தயிர் + குடம் = தயிர்க் குடம் (தயிரை வைத்துள்ள குடம்)

தேர் + பாகன் = தேர்ப்பாகன் (தேரை ஓட்டும் பாகன்.)

(ஆ) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

எ-டு.

வெள்ளி + பணம் = வெள்ளிப் பணம் (வெள்ளியால் செய்த பணம்.)

பித்தளை + தட்டு = பித்தளைத் தட்டு (பித்தளையால் செய்த தட்டு.)

பித்தளை + குடம் = பித்தளைக் குடம் (பித்தளையால் செய்த குடம்.)

பருத்தி + புடைவை = பருத்திப் புடைவை (பருத்தியால் நெய்யப்படும் புடைவை.)

பூ + பந்தல் = பூப்பந்தல் (பூவால் அலங்கரிக்கப்பட்ட பந்தல்.)

இரும்பு + பெட்டி = இரும்புப் பெட்டி (இரும்பாற் செய்யப்பட்ட பெட்டி.)

அட்டை + பெட்டி = அட்டைப் பெட்டி (அட்டையால் செய்த பெட்டி.)

காகிதம் + புத்தகம் = காகிதப் புத்தகம் (காகிதத்தால் ஆன புத்தகம்.)

(இ) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

எ-டு.

குழந்தை + பால் = குழந்தைப் பால் (குழந்தைக்குக் கொடுக்கும் பால்)

உரிமை + போராட்டம் = உரிமைப் போராட்டம் (உரிமைக்கு நடத்தும் போராட்டம்)

தலைமுடி + சாயம் = தலைமுடிச் சாயம் (தலைமுடிக்குப் பூசும் சாயம்)

பசு + தீவனம் = பசுத் தீவனம் (பசுவுக்குக் கொடுக்கும் தீவனம்)

குறிப்பு : *பெயரும் பெயரும் சேர்ந்து அமைவது பெயர்த் தொகை. இப்பெயர்த் தொகைகளில் நிலை மொழி உயர்திணை யாக இருப்பின் வலி மிகாது.*

(ஈ) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

எ-டு.

நிலம் + கரி = நிலக்கரி (நிலத்தில் இருந்து எடுக்கும் கரி)

ஏரி + தண்ணீர் = ஏரித் தண்ணீர் (ஏரியிலிருந்து கிடைக்கும் தண்ணீர்)

தேங்காய் + பால் = தேங்காய்ப் பால் (தேங்காயிலிருந்து பிழியப்படும் பால்)

(உ) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

எ-டு.

மலை + கள்ளன் = மலைக் கள்ளன் (மலையின்கண் உள்ள கள்ளன்)

சென்னை + பல்கலைக்கழகம் = சென்னைப் பல்கலைக்கழகம் (சென்னையின்கண் உள்ள பல்கலைக்கழகம்)

மதுரை + சங்கம் = மதுரைச் சங்கம் (மதுரையின்கண் உள்ள சங்கம்)

மருதமலை + கோயில் = மருதமலைக் கோயில் (மருத மலையின்கண் உள்ள கோயில்)

சோலை + குயில் = சோலைக் குயில் (சோலையின்கண் உள்ள குயில்)

அன்னை + பால் = அன்னைப் பால் (அன்னையின்கண் உள்ள பால்)

சென்னை + கல்லூரி = சென்னைக் கல்லூரி (சென்னையின்கண் உள்ள கல்லூரி)

குறிப்பு : *ஆறாம் வேற்றுமை தவிர, மற்ற வேற்றுமைகளில் அமையும் உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின் வலி மிகும்.*

35) 'ஆக' என்று முடியும் அனைத்துச் சொல்லுருபுகளின் பின்னும் வலி மிகும்.

எ-டு.

ஆக - முதல்வர் அன்பாகப் பேசினார்.

மெதுவாகப் பாடுகிறாள்.

சிறப்பாகச் செயற்படுகிறார்.

ஏழையாகப் பிறந்தான்.

பணக்காரனாகப் பெரு முயற்சி செய்கிறான்.

பதிலாக - அரிசிக்குப் பதிலாகச் சோறு கொடுக்க மாநகராட்சி முடிவு.

மூலமாக - நாடாளுமன்ற உறுப்பினர் மூலமாகக் குடியரசுத் தலைவரைச் சந்தித்தார்.

மாறாக - சட்டத்திற்கு மாறாகச் செயற்படுபவர் தண்டிக்கப்படுவர்.

வழியாக - கடல் வழியாகத் தீவிரவாதிகள் நகருக்குள் ஊடுருவ முயற்சி செய்கின்றனர்.

வாயிலாக - நாளிதழ்கள் வாயிலாகச் செய்திகள் வெளியாகின்றன.

ஏதுவாக - கிராமப் பெரியவர் குடும்பத்திற்கு ஏதுவாகப் பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

'ஆக' என்று முடியும் அனைத்துச் சொற்களின் பின்னும் வலி மிகும்.

36) வைத்து, பொறுத்து, விட்டு, பொருட்டு, முன்னிட்டு, குறித்து – என்னும் வன்தொடர்க் குற்றியலுகர ஈற்றுச் சொல்லுருபுகளின் பின் வலி மிகும்.

எ-டு.

வைத்து - குறிப்பு வைத்துப் பேசினான்.

பொறுத்து - இருக்கும் பணத்தைப் பொறுத்துத் திட்டமிடலாம்.

விட்டு - மனைவியை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்கிறார்.

பொருட்டு - வாடிக்கையாளர்களின் பொருட்டுச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முன்னிட்டு - தீபாவளியை முன்னிட்டுப் பணப் புழக்கம் அதிகரித்துள்ளது.

குறித்து - சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்துப் பொதுமக்களிடம் விழிப்புணர்வு போதுமான அளவு இல்லை.

37) நோக்க, ஆர, போல – என்னும் அகர ஈற்றுச் சொல்லுருபுகளின் பின் வலி மிகும்.

எ-டு.

நோக்க - அவளை நோக்கத் தயக்கமாக இருந்தது.

ஆர - அவன் வயிறாரச் சாப்பிட்டு நாள்கள் பல ஆயின.

போல - சிங்கம் போலச் சீறினான்.

- புலி போலப் பாய்ந்து சென்றான்.

- தமிழ் மொழி போலப் பெருமை வாய்ந்த மொழி எதுவுமில்லை.

38) சுற்றி, வேண்டி, ஒட்டி – என்னும் இகர ஈற்றுச் சொல்லுருபுகளின் பின் வலி மிகும்.

எ-டு.

சுற்றி - அவனைச் சுற்றிப் பெரிய நண்பர் கூட்டமே உள்ளது.

- கிராமத்தைச் சுற்றிப் பார்ப்பது இனிமையானது.

வேண்டி - தங்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள் கிறேன்.

- உங்களை வேண்டிச் சித்தப்பா வந்துள்ளார்.

ஒட்டி - முதல்வரின் வருகையையொட்டிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன.

- பொங்கல் பண்டிகையையொட்டிப் புதுத் திரைப் படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

39) இடை, கீழ் என்னும் சொல்லுருபுகளின் பின் வலி மிகும்.

எ-டு.

இடை - இடைப்பட்ட நாள்களில் ஓய்வு எடுத்துக்கொள்.

- புலிகளிடைப் பசு போலத் தவிப்புற்றான்.

கீழ் - இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்தவர்கள் பலர்.

- கீழ்க்காணும் செய்திகள் முக்கியமானவை.

40) நிலைமொழி ஈற்றில் 'ய், ர், ழ்' என்னும் மெய்களுள் ஒன்று நின்று, வல்லெழுத்தில் தொடங்கும் பெயர்ச்சொல் வருமொழியாய் வந்தால், இடையில் வருமொழி முதல் வல்லொற்று மிகும். நிலைமொழி அஃறிணையாக இருத்தல் வேண்டும்.

எ-டு.

தமிழ் + பாட்டு = தமிழ்ப் பாட்டு

ஊழ் + பயன் = ஊழ்ப் பயன்

பொய் + சாட்சி = பொய்ச் சாட்சி

வாய் + பேச்சு = வாய்ப் பேச்சு

போர் + தொழில் = போர்த் தொழில்

ஊர் + தலைவர் = ஊர்த் தலைவர்

நாய் + குட்டி = நாய்க் குட்டி

தமிழ் + செய்யுள் = தமிழ்ச் செய்யுள்

தயிர் + குழம்பு = தயிர்க் குழம்பு

41) ஒரே சொல்லில் ய், ர், ழ் இந்த மூன்று மெய்யெழுத்துகளைத் தொடர்ந்து வரும் வல்லினம் மிகும்.

எ-டு.

பாய்ச்சினாள்

வாய்த்தது

பார்க்கிறான்

வேர்ப்பலா, வேர்ப் பிடிப்பு

வாழ்க்கை

வாழ்த்தினார்

42) திசைப் பெயர்களின் பின் வலி மிகும்.

எ-டு.

கிழக்கு + பக்கம் = கிழக்குப் பக்கம்

மேற்கு + திசை = மேற்குத் திசை

வடக்கு + புறம் = வடக்குப் புறம்

தெற்கு + கோட்டம் = தெற்குக் கோட்டம்

43) மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லெழுத்தை முதலாவதாகக் கொண்ட பெயர்ச் சொற்கள் வந்து புணரும்போது வலி மிகும்.

எ-டு.

நண்டு + கூட்டம் = நண்டுக் கூட்டம்

பங்கு + சந்தை = பங்குச் சந்தை

பஞ்சு + கொட்டை = பஞ்சுக் கொட்டை

சாந்து + கயிறு = சாந்துக் கயிறு

44) வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வல்லெழுத்தை முதலாவதாகக் கொண்ட பெயர்ச் சொற்கள் புணரும்போது வலி மிகும்.

எ-டு.

பத்து + பாட்டு = பத்துப் பாட்டு

கொக்கு + கால் = கொக்குக் கால்

கழுத்து + கட்டை = கழுத்துக் கட்டை

அச்சு + பிழை = அச்சுப் பிழை

45) பண்புத் தொகையில் வலி மிகும்.

எ-டு.

கறுப்பு + காளை = கறுப்புக் காளை

வெள்ளை + புடைவை = வெள்ளைப் புடைவை

சிவப்பு + சேலை = சிவப்புச் சேலை

அருமை + பாட்டி = அருமைப் பாட்டி

46) இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

எ-டு.

முல்லை + காடு = முல்லைக் காடு

தாமரை + கொடி = தாமரைக் கொடி

மல்லிகை + பூக்கள் = மல்லிகைப் பூக்கள்

தமிழ் + கவிதை = தமிழ்க் கவிதை

முருங்கை + காய் = முருங்கைக் காய்

மோர் + குழம்பு = மோர்க் குழம்பு

சாரை + பாம்பு = சாரைப் பாம்பு

தை + திங்கள் = தைத் திங்கள்

கோடை + காலம் = கோடைக் காலம்

47) உவமைத் தொகையில் வலி மிகும்.

எ-டு.

தாமரை + திருவடி = தாமரைத் திருவடி

முத்து + பற்கள் = முத்துப் பற்கள்

கழுதை + பயல் = கழுதைப் பயல்

முத்து + புன்னகை = முத்துப் புன்னகை

கமலம் + செங்கண் = கமலச் செங்கண்

48) சால, தட, தவ, குழ ஆகிய உரிச்சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

சால + சில = சாலச் சில

சால + கற்றவர் = சாலக் கற்றவர்

சால + பேசினார் = சாலப் பேசினார்

தட + கை = தடக்கை

தவ + பெரியவர் = தவப் பெரியவர்

தவ + சேய்த்து = தவச் சேய்த்து

குழ + கயிறு = குழக் கயிறு

49) தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகாரத்தின் பின் வலி மிகும்.

எ-டு.

கனா + கண்டேன் தோழி = கனாக் கண்டேன் தோழி

நிலா + பாட்டு = நிலாப் பாட்டு

பலா + பழம் = பலாப் பழம்

வினா + கேட்டு = வினாக் கேட்டு

50) உருவகங்களின் பின் வலி மிகும்.

எ-டு.

வாழ்க்கைப் படகு

கண்ணீர்ப் பூக்கள்

வாழ்க்கைத் தேர்

51) மெல்ல, உரக்க, நிரம்ப, நிறைய என்னும் அகர ஈற்று வினையடைகளின் பின் வலி மிகும்.

எ-டு.

மெல்லப் போ

மெல்லப் பேசு

உரக்கச் சொன்னேன்

உரக்கக் கூவினான்

நிரம்பப் பேசினான்

நிரம்பக் கொடுத்தார்

நிறையச் செய்திகளை அறிந்தோம்

நிறையக் கற்றுக் கொள்

52) எல்லா, அனைத்து என்னும் சொற்களின் பின் வலி மிகும்.

எ-டு.

எல்லாக் குழந்தைகளும் வந்துவிட்டனர்.

எல்லாப் பாடங்களும் கடினமாக உள்ளன.

அனைத்துப் பள்ளிகளுக்கும் நாளை விடுமுறை.

அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கூற வேண்டும்.

53) நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஒற்று இரட்டித்துப் புணரும்பொழுது வல்லினம் மிகும்.

எ-டு.

ஆடு + தலை = ஆட்டுத் தலை

ஆறு + பெருக்கு = ஆற்றுப் பெருக்கு

நாடு + பற்று = நாட்டுப் பற்று

காடு + பூனை = காட்டுப் பூனை

54) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஒற்று இரட்டித்துப் புணரும்பொழுது வல்லினம் மிகும்.

எ-டு.

வயிறு + பாடு = வயிற்றுப்பாடு

குருடு + கண் = குருட்டுக் கண்

55) ஐகாரச் சாரியைப் பெற்ற குற்றியலுகரச் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

எ-டு.

பண்டு + காலம் = பண்டைக் காலம்

இன்று + பொழுது = இற்றைப் பொழுது

நேற்று + கூலி = நேற்றைக் கூலி

56) ஓரெழுத்து ஒரு மொழியின் பின் ‘கள்’ விகுதி சேரும்போது வலி மிகும்.

எ-டு.

ஆ + கள் = ஆக்கள்

பூ + கள் = பூக்கள்

பா + கள் = பாக்கள்

ஈ + கள் = ஈக்கள்

57) ‘குறில் + நெடில்’ இணையாய் வரும் ஆகார ஈற்று நிரையசைச் சொற்களின் பின் ‘கள்’ விகுதி சேரும்போது வலி மிகும்.

எ-டு.

விழா + கள் = விழாக்கள்

கனா + கள் = கனாக்கள்

வினா + கள் = வினாக்கள்

சுறா + கள் = சுறாக்கள்

புறா + கள் = புறாக்கள்

58) உகர ஈற்றில் முடியும் 'குறில் + குறில்' இணைந்த நிரையசைச் சொற்களின் பின் 'கள்' விகுதி வரும்போது வலி மிகும்.

எ-டு.

வடு + கள் = வடுக்கள்

வழு + கள் = வழுக்கள்

தெரு + கள் = தெருக்கள்

பசு + கள் = பசுக்கள்

59) முற்றியலுகரத்தினை அடுத்துவரும் வலி மிகும்.

தனிக் குறிலை அடுத்து வரும் எல்லா உகரமும், இரண்டு எழுத்துகளை அடுத்து வரும் கு, சு, டு, து, பு, று அல்லாத மற்ற உகரமும் முற்றியல் உகரங்கள் ஆகும். முற்றியலுகரத்தினை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

எ-டு.

பொது + பார்வை = பொதுப் பார்வை

கணு + கால் = கணுக்கால்

திரு + கோயில் = திருக்கோயில்

அறிவு + கல்லூரி = அறிவுக் கல்லூரி

முழு + தொகை = முழுத் தொகை

60) ன், ல், ண், ள் – விகுதி திரிதல்

(அ) நின்ற சொல்லின் இறுதியில் 'ன்' இருந்து, வருஞ்சொல்லின் முதலில் வல்லினம் இருந்தால் 'ன்' என்ற எழுத்து 'ற்' என்ற எழுத்தாக மாற்றம் பெறும்.

எ-டு.

பொன் + பாவை = பொற்பாவை

தன் + குறி = தற்குறி

பொன் + செல்வன் = பொற்செல்வன்

(ஆ) நின்ற சொல்லின் இறுதியில் 'ல்' என்ற எழுத்து இருந்து வருஞ் சொல்லின் முதலில் வல்லினம் இருந்தால், 'ல்' என்ற எழுத்து, 'ற்' என்ற எழுத்தாக மாற்றம் பெறும்.

எ-டு.

கல் + கண்டு = கற்கண்டு

பல் + பொடி = பற்பொடி

சொல் + சிதைவு = சொற் சிதைவு

கால் + சிலம்பு = காற்சிலம்பு

(இ) நின்ற சொல்லின் இறுதியில் 'ன்' அல்லது 'ல்' இருந்து, வருஞ்சொல்லின் முதலில் 'த' இருக்குமானால் நின்ற சொல்லின் இறுதியில் உள்ள 'ன்', 'ல்' ஆகிய இரண்டும் 'ற்' ஆக மாறுவதனுடன் 'த'வையும் 'ற'வாக மாற்றிவிடும்.

எ-டு.

தொழில் + துறை = தொழிற்றுறை

பொன் + தகடு = பொற்றகடு

(ஈ) நின்ற சொல்லின் இறுதியில் 'ண்' இருந்து வருஞ்சொல்லின் முதலில் வல்லினம் இருந்தால், 'ண்' என்ற எழுத்து 'ட்' எனத் திரியும்.

எ-டு.

மண் + பாண்டம் = மட்பாண்டம்

மண் + பானை = மட்பானை

(உ) நின்ற சொல்லின் இறுதியில் 'ள்' இருந்து, வருஞ்சொல்லின் முதலில் வல்லினம் இருந்தால், 'ள்' என்ற எழுத்து 'ட்'–ஆக மாறும்.

எ-டு.

புள் + பறந்தது = புட்பறந்தது

முள் + குத்தியது = முட்குத்தியது

(ஊ) நின்ற சொல்லின் இறுதியில் 'ண்' அல்லது 'ள்' இருந்து, வருஞ்சொல்லின் முதலில் 'த' எனும் எழுத்து வருமானால், 'ண்', 'ள்' ஆகியன 'ட்' ஆகத் திரிவதனுடன், வரும் சொல்லின் முதலில் உள்ள 'த' என்ற எழுத்தையும் 'ட'வாகத் திரித்துவிடும்.

எ-டு.

கண் + திறந்தது = கட்டிறந்தது

தூண் + தடித்தது = தூட்டடித்தது

61. 'சின்ன' என்னும் பெயரடை ஏனைய பெயரடைகள்போல் அல்லாமல் ஒற்று ஏற்று வரும்.

எ-டு.

சின்ன + குடை = சின்னக் குடை

சின்ன + தட்டு = சின்னத் தட்டு

சின்ன + பெண் = சின்னப் பெண்

62. கூட, விட ஆகிய சொற்களின் பின் வலிமிகும்.

எ-டு.

கூட + கொடு = கூடக்கொடு

கூட + கேள் = கூடக்கேள்

(கத்தியை) விட + கூர்மை = (கத்தியை) விடக் கூர்மை

(அவளை) விட + பாசம் = (அவளை) விடப் பாசம்

5. வலி மிகா இடங்கள்

1) சுட்டுப் பெயர்களுடன் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.

எ-டு.

அது காண், இது காண், அது செய், இது செய், அது தா, இது தா, அது பார், இது பார், இவை சிறந்தவை, அவை கடினமானவை, இவை பார்க்கத் தகுந்தன.

2) வினாப் பெயர்களுடன் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.

எ-டு.

எது கண்டார்? ஏது கண்டாய்? யாது காண்பாய்?

எது செய்தாய்? ஏது செய்தாய்? யாது செய்வாய்?

எது தந்தாய்? ஏது தருவாய்? யாது தருவாய்?

எது படித்தாய்? ஏது பெற்றாய்? யாது பெற்றாய்?

எவை தவறு? யாவை போயின?

3) முதல் வேற்றுமையில் புணர்ந்து நிற்கும் வல்லின எழுத்துகள் மிகா. (முதல் வேற்றுமை – எழுவாய்; உருபு இல்லை)

எ-டு.

புலி கண்டது, எலி செய்தது,

குதிரை தாண்டியது, கழுதை பார்த்தது,

மாடு பாய்ந்தது, கிளி பேசும்,

அரிசி கொதிக்கிறது, உலகு போற்றும்,

மலர் பூத்தது, கிளி கொஞ்சியது,

வண்டி சென்றது, பேய் திரிந்தது,

பாம்பு சீறிற்று.

4) மூன்றாம் வேற்றுமை விரிகளில் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.

எ-டு.

என்னொடு + கற்ற = என்னொடு கற்ற

என்னொடு + சிரித்த = என்னொடு சிரித்த

பொன்னொடு + தந்த = பொன்னொடு தந்த

என்னொடு + போந்த = என்னொடு போந்த

சேரனொடு + கண்ணன் வந்தார் = சேரனொடு கண்ணன் வந்தார்.

5) ஆறாம் வேற்றுமை விரிகளில் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.

எ-டு.

எனது கை, எனது சடை

எனது தலை, எனது பல்

6) விளித் தொடர்களில் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.

எ-டு.

அண்ணா கேள், மகளே போ

தந்தையே தா, மகனே பார்

பெண்ணே பார், கனவே கலையாதே

கண்ணா தா.

7) பெயரெச்சத்துடன் புணரும் வல்லின எழுத்துகள் மிகா.

எ-டு.

ஓடிய குதிரை, ஓடுகின்ற குதிரை, திரிந்த காலம்

வந்த சிரிப்பு, வருகின்ற சிரிப்பு, பெற்ற செல்வம்

தந்த தெய்வம், தருகிற தெய்வம், படித்த பையன்

பார்த்த பெண், பார்க்கிற பெண், வென்ற தமிழன்.

8) 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

உண்ணிய கண்டான்

காணிய சென்றான்

உண்ணிய தந்தான்.

9) 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

உண்ணுபு கேட்டாள்

காணுபு சென்றான்

உண்ணுபு தந்தான்

காணுபு போனான்.

10) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

நாடு கண்டான், தண்ணீர் குடித்தான், மோர் குடித்தான்,

காடு சேர்ந்தான், புத்தகம் படித்தான்,

புளி கரைத்தான், வீடு இடித்தான், காது கடித்தான்.

11) 'படி' என்று முடியும் வினையெச்சங்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

தரும்படி கேட்டான், *பேசும்படி சொன்னார்,*

வரும்படி சொன்னான், *உண்ணும்படி வேண்டினார்,*

எழுதும்படி தந்தான், *சொல்லும்படி பேசினான்.*

12) அகரவீற்று வினைமுற்றுகளுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

சென்றன பசுக்கள்

பறந்தன பறவைகள்

விழுந்தன கதிர்கள்

பொழிந்தன கார்மேகங்கள்

வந்தன கழுதைகள்

நடந்தன கால்கள்

13) வியங்கோள் வினைமுற்றுகளுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

வாழ்க தலைவர், வாழ்க கலை,

வீழ்க கயவர், வாழ்க தலைவி,

வாழ்க தமிழ், வாழ்க பாரதம்,

வாழ்க தமிழகம், வீழ்க பகைவர்,

ஒழிக துரோகம்.

14) வினைத்தொகையில் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

குடி தண்ணீர், பாய் புனல், வளர்பிறை, குடிநீர்,

பழமுதிர் சோலை, இடு பொருள், சொறி சிரங்கு,

வடி தேன், செய் கடன், சுடு சோறு,

உயர் குணம், சுடு காடு, உறை பொருள்,

நிமிர் தலை, அடு களிறு, சுடு சொல்,

ஊறு காய், எறி திரை, குளிர் காலம், தாழ் குழல்,

திருவளர் செல்வி, திருவளர் செல்வன்,

திருநிறை செல்வன், திருநிறை செல்வி.

15) அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் சொற்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

அவ்வளவு கண்டேன்

எவ்வளவு கொடுத்தாய்

இவ்வளவு பேசினாய்

எவ்வளவு செய்தாய்.

16) ஆ, ஏ, ஓ என்னும் ஈறுகளையுடைய வினாப் பெயர்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

அவனா கண்டான், அவனே கண்டான், அவனோ கண்டான்

இவனா செய்தான், இவனே செய்தான், இவனோ செய்தான்

அவனா தந்தான், அவனே தந்தான், அவனோ தந்தான்

இளங்கோவா பார்த்தான், இளங்கோவே பார்த்தான்,

இளங்கோவோ பார்த்தான்.

17) எட்டு, பத்து தவிர எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

ஒரு புத்தகம், ஒன்று சாப்பிடு, ஒன்று கூடுவோம், ஒன்று செய், ஒரு செயல், ஒரு பாடம், ஒரு கோடி

இரண்டு பசுக்கள், இரண்டு கண்கள், இரண்டு காளைகள், இரு கண்கள்

மூன்று காளைகள், மூன்று தமிழ், மூன்று கனிகள்

நான்கு திசைகள், நான்கு பிள்ளைகள், நான்கு படைகள்

ஐந்து கால்கள், ஐந்து பழங்கள், ஐந்து பொறிகள்

அறு தொழில், ஆறுபடை, ஆறு காடுகள், அறுசீர், அறுபதம்

ஏழு கடல்கள், ஏழு பிறப்பு, ஏழு சிறப்பு, ஏழு தினம்

ஒன்பது தானியம், ஒன்பது பறவைகள்.

18) அகரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயருடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

சில கழுதைகள், சில பன்றிகள், சில பொருள்கள், சில பதர்கள்,

பல பெயர்கள், பல காட்சிகள், பல கேள்விகள், பல சொற்கள், பல தடைகள்

19) வன்தொடர் ஒழிந்த ஏனைய குற்றியலுகரங்களுடன் புணரும் வல்லெழுத்துகள் மிகா.

எ-டு.

ஆறு தலை, எஃகு சிறிது

விறகு பெரிது, பந்து தந்தான்

செய்து போனான்.

20) நான்காம் வேற்றுமைத் தொகையில் உயர்திணைப் பெயர்களின் பின்வரும் வலி மிகா.

எ-டு.

வள்ளுவர் கோட்டம்

ஆசிரியர் சம்பளம்

தேன்மொழி கணவன்

கண்ணகி கோயில்.

21) உம்மைத் தொகையில் வலி மிகா.

எ-டு.

தாய் தந்தை

இரவு பகல்

செடி கொடி

பொரி கடலை

வெற்றிலை பாக்கு

அக்கா தங்கை

இட்டலி தோசை

பூரி கிழங்கு

(இராப் பகல், ஏற்றத் தாழ்வு - இவற்றில் மட்டும் விதிவிலக்காக வலி மிகும்.)

22) விளித் தொடரில் வலி மிகா.

எ-டு.

அழகா கொடு

செல்வி சொல்

மணி தா

செல்வா பார்

23) நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டால் கீழ்க்காணும் இடங்களில் வலி மிகாது.

(அ) ஒற்று இட வேண்டிய சொல்லின்பின் கால்புள்ளியைப் பயன்படுத்துவதால் ஒற்று மிகுவது தவிர்க்கப்படுகிறது.

எ-டு.

கேட்பதற்கு, காது கூர்மையாக இருக்கவேண்டும்.

அதைச் செய்வதற்கு, பணம் தேவைப்படும்.

அதற்கு மாற்றாக, பட்டாடை எடுத்தாள்.

(ஆ)வருமொழி மேற்கோள் குறிக்குள் இருந்தால் வலி மிகாது.

எ-டு.

இரு சொற்கள் இணைவதை ‘புணர்ச்சி’ என்கிறோம்.

அதனை ‘தினமணி’யில் காணலாம்.

நகரின் பெயரை ‘சென்னை’ என அரசு மாற்றியது.

(இ) வருமொழி அடைப்புக் குறியின் உள்ளேயும் வெளியேயும் இருந்தால் வலி மிகாது.

எ-டு.

எனக்கு அவரை (பாடலாசிரியராக) தெரியாது.
எனக்கு அவரை (ஆசிரியராக) தெரியாது.
உடற்கூறியலை (anatomy) *பற்றிய நூல்.*

(ஈ) வருமொழி சுருக்கக் குறியீடாக இருந்தால் வலி மிகாது.

எ–டு.

மின்னிணைப்பை தமிவா (தமிழ்நாடு மின்சார வாரியம்) துண்டித்தது.

24) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர இதர பெயரெச்சங்களுக்குப் பின்வரும் வலி மிகா.

எ–டு.

செய்கின்ற பணி	*பெரிய தந்தை*	*வந்த பையன்*
காணாத கண்	*பெரிய புராணம்*	*ஓடாத குதிரை*
பேசாத படம்	*இனிய பாடல்*	*பறந்த புறா*
வாடாத பூ		

25) அன்று, இன்று, என்று, ஆவது, போன்று, அடா, அடி என்னும் சொற்களின் பின் வலி மிகா.

எ–டு.

அன்று கேட்டார்

இன்று சொன்னார்

என்று தருவார்?

அவரைப் போன்று கற்றவர் யாருளர்?

அவராவது கொடுப்பதாவது?

யாரடா செல்வதங்கு?

ஏனடி செல்கிறாய்?

26) அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் சொற்களின் பின் வலி மிகா.

எ–டு.

அவ்வளவு பெரிய வீடா?

இவ்வளவு சிறிய வீடா?

எவ்வளவு கொடுத்தார்?

27) அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு என்னும் சொற்களின் பின் வலி மிகா.

எ-டு.

அவ்வாறு சொன்னார்.

அவ்வாறு செய்திருப்பானோ?

இவ்வாறு போர் நடந்துவிடுமா?

இவ்வாறு கூறினார்.

எவ்வாறு செய்தல் வேண்டும்?

எவ்வாறு கேட்டார்?

28) அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வலி மிகா.

எ-டு.

அத்தனை கேள்விகளா? *அத்தனை குரங்குகளா?*

இத்தனை பாடல்களா? *இத்தனை கோயில்களா?*

எத்தனை சிரமங்கள் உள்ளன? *எத்தனை பசுக்கள் உள்ளன?*

29) அத்தகைய, இத்தகைய, எத்தகைய;
அன்றைய, இன்றைய, என்றைய;
அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட;
அப்போதைய, இப்போதைய, எப்போதைய;
பின்னைய, நேற்றைய, நாளைய –
– என்னும் சொற்களின் பின் வலி மிகா.

எ-டு.

அத்தகைய திறமை உள்ளது.

அத்தகைய பேச்சைக் கேட்டதுண்டா?

இத்தகைய செயலை முடிக்க முடியாது.

இத்தகைய தன்மை கொண்டவர்.

எத்தகைய மனிதர்கள் அவர்கள்?

எத்தகைய சால்பு உடையவர்?

அன்றைய செய்தி விரும்பத்தக்கதன்று.

அன்றைய கோட்பாடுகள்

இன்றைய தகவல் என்ன?

இன்றைய கடமைகள்

என்றைய செய்தி இது?

என்றைய பழக்கவழக்கம்?

அப்படிப்பட்ட பெரியவர் இவர்தாமா?

அப்படிப்பட்ட கோவில் இதுவா?

இப்படிப்பட்ட செயலைச் செய்யாதீர்.

இப்படிப்பட்ட காப்பியம் இது.

எப்படிப்பட்ட குடும்பம் அது?

எப்படிப்பட்ட கற்பனை இது?

அப்போதைய பழக்க வழக்கங்கள்

இப்போதைய பண்பாட்டுச் சிறப்புகள்

எப்போதைய கோட்பாடுகள்?

முன்னைய தூற்றுதல்

பின்னைய பாராட்டுகள்

நேற்றைய தடைகள்

நாளைய காட்சிகள்.

30) இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ', நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' ஆகிய இவ்விரண்டைத் தவிர, ஏனைய வேற்றுமை உருபுகளின் பின் வலி மிகா.

எ-டு.

என்னோடு சேர்ந்துவிடு.

(இங்கு மூன்றாம் வேற்றுமை உருபு 'ஒடு' என்பதன் பின் வலி மிகவில்லை)

எங்களது பூமி - 'அது' ஆறன் உருபு. வலி மிகவில்லை.

பாலொடு தேன் கலந்தற்றே - ஒடு

மரத்திலிருந்து பறித்தான் - இல்

குரங்கது குட்டி - அது

என்னுடைய புத்தகம் - உடைய

மலையினின்று பாய்ந்தான் - இன்

31) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.

எ-டு.

பறவை பிடித்தான்.

தமிழ் படித்தான்.

32) மூன்றாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.

எ-டு.

கை தட்டினான் - (கையால் தட்டினான்)

33) நான்காம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.

எ-டு.

சிறை சென்றான் - (சிறைக்குச் சென்றான்)

34) ஐந்தாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.

எ-டு.

வரை பாய்ந்தான் - (வரையிலிருந்து பாய்ந்தான்)

35) ஏழாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.

எ-டு.

ஊர் தங்கினான் - (ஊரின்கண் தங்கினான்)

36) நிலைமொழி உயர்திணையாய் அமையும் எந்தப் பெயர்த்தொகையிலும் வலி மிகா.

எ-டு.

தோழி கூற்று

திருத்தொண்டர் திருக்கோயில்

ஆசிரியர் சம்பளம்

பெரியார் பேரன்

மேற்கண்ட தொடர்களெல்லாம், ஆறாம் வேற்றுமைத் தொகையாகவும், நான்காம் வேற்றுமைத் தொகையாகவும் அமைந்தபோதிலும், நிலைமொழி உயர்திணை ஆதலால், வலி மிகவில்லை.

37) அன்று, பிறகு, முன்பு, உடைய, உள்ள, உரிய, ஆன, வரை, கொண்டு, தக்க, தகுந்த, ஏற்ற – ஆகியன வலி மிகாமல் புணரும் சொல்லுருபுக ளாகும்.

எ–டு.

அன்று - திங்களன்று தேர்வு நடைபெறும்.

பிறகு - அடுத்த தலைவர் யாரென்று பிறகு பார்ப்போம்.

முன்பு - வீட்டின் முன்பு செடிகள் வளர்ந்துள்ளன.

உடைய - யாருடைய காசும் தேவையில்லை.

உள்ள - அவருக்குள்ள செல்வாக்கு அளப்பரியது.

உரிய - ஒவ்வொருவர்க்கும் உரிய பங்கு கிடைக்கும்.

ஆன - சிறந்த இயக்குநருக்கான பரிசு ஒரு தமிழருக்குக் கிடைத்தது.

வரை - காடு வரை பிள்ளை

கொண்டு - மனிதன் இறக்கும்போது கொண்டு செல்வது யாதுமில.

தக்க - படிப்புக்குத் தக்க பதவி இன்னும் கிடைக்க வில்லை.

தகுந்த - வேலைக்குத் தகுந்த சம்பளம் தரவில்லை.

ஏற்ற - மனநிலைக்கு ஏற்ற சோகப் பாட்டு காதில் விழுகிறது.

இந்தச் சொல்லுருபுகள் வலி மிகாமல் புணரும்.

38) முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்றுத் தொடர்களில் வலி மிகா.

எ–டு.

நட கோவலா

வா சாத்தா

கொடு தேவா

எறி பூதா

39) எதிர்மறைப் பெயரெச்சங்களில் வலி மிகா.

எ-டு.

செல்லாத பணம்

கறவாத பசு

கேளாத செய்தி

முற்றாத தேங்காய்

40) சிறிய, பெரிய – என்னும் குறிப்புப் பெயரெச்சங்களின் பின் வலி மிகா.

எ-டு.

சிறிய + கண்ணாடி = சிறிய கண்ணாடி

சிறிய + பெண் = சிறிய பெண்

பெரிய + கொட்டாய் = பெரிய கொட்டாய்

பெரிய + பாட்டி = பெரிய பாட்டி

பெரிய + புத்தகம் = பெரிய புத்தகம்

41) மென்தொடர்க் குற்றுகர ஈற்று வினையெச்சத்தில் வலி மிகாது.

எ-டு.

கண்டு களித்தான்

வந்து சேர்ந்தான்

சென்று திரும்பினான்

வந்து போனான்

உண்டு படுத்தான்

வென்று பிடித்தான்

42) இடைத்தொடர்க் குற்றுகர ஈற்று வினையெச்சத்தில் வலி மிகாது.

எ-டு.

பெய்து கெடுத்தது

நெய்து சேர்த்தான்

கொய்து தின்றான்

செய்து பார்த்தான்

43) உயிர்த்தொடர்க் குற்றுகர ஈற்று வினையெச்சத்தில் வலி மிகாது.

எ-டு.

அழுது கலங்கினான்

உழுது களைத்தான்

ஆராயாது செய்தான்

அழுது தீர்த்தான்

(குறிப்பு : *வன்தொடர்க் குற்றுகர ஈற்று வினையெச்சங்கள் தவிர, ஏனைய குற்றுகர ஈற்று வினையெச்சங்களின் பின் வலி மிகா.)*

44) ஆவது, அம்ம, மன்ற, வாளா, சும்மா – என்னும் இடைச்சொற்களின் பின் வலி மிகா.

எ-டு.

ஆவது : நானாவது போய்ப் பார்த்திருக்க வேண்டும். அவனாவது சென்றானா?

அம்ம : அம்ம கொடிது

மன்ற : மன்ற தெளிந்தார்

வாளா + சென்றான் = வாளா சென்றான்

சும்மா + போனான் = சும்மா போனான்

45) சால, தவ, தட, குழ – என்னும் உரிச்சொற்களின் பின் வலி மிகும். ஏனைய உரிச்சொற்களின் பின் (உறு, நனி, கடி, கூர், மா, கழி, மழ – என்னும் உரிச்சொற்களின் பின்) வலி மிகா.

எ-டு.

உறு : உறு பொருள் கொடுத்தும் உதவினான்.

நனி : நனி தின்றான் சோற்றை.

கடி : கடி காவல் நிறைந்த வீடு.

கூர் : கொடுமை கூர் சித்தியின் செயல்களைப் பொறுக்க முடியவில்லை.

மா : *மா பெரும் கூட்டம் நடந்தது இங்கு.*

கழி : *கழி பேருவகை கொண்டான் காதலன்.*

மழ : *மழ களிறு இங்கே உள்ளது.*

46) அடுக்குத் தொடர்களில் வலி மிகா.

எ-டு.

பார் பார்

பாம்பு பாம்பு

போ போ

தா தா

47) இரட்டைக் கிளவிகளில் வலி மிகா.

எ-டு.

சிலு சிலு, கல கல, பள பள, சல சல,

தள தள, குவா குவா, தக தக, பட பட,

கிடு கிடு, குடு குடு

சிலுசிலு - சிலுசிலுவெனக் குளிர் அடிக்கிறது.

கலகல - காற்று கலகலவென வீசுகிறது.

பளபள - பளிங்குத் தரை பளபளவெனக் காட்சியளிக்கிறது.

சலசல - தென்னங்கீற்று சலசலவென ஓசையிட்டுக் காற்றில் அசைகிறது.

தகதக - தங்க நகை தகதகவென மிளிர்ந்தது.

குவா குவா - குழந்தை குவா குவாவென ஓசையிடுகிறது.

தளதள - அப்பெண் தளதளவென அழகுடன் இருந்தாள்.

கிடுகிடு - கிடுகிடு பள்ளம்

படபட - படபடவென்று பேசினான்.

48) 'கள்' என்னும் அஃறிணைப் பன்மை விகுதியில் வலி மிகாது.

எ-டு.

எழுத்து + கள் = எழுத்துகள்

தோப்பு + கள் = தோப்புகள்

கருத்து + கள் = கருத்துகள்

வாழ்த்து + கள் = வாழ்த்துகள்

பொருள் + கள் = பொருள்கள்

நாள் + கள் = நாள்கள்

49) வடமொழி, ஆங்கிலம் போன்ற பிற மொழிச் சொற்கள் வருமொழியாக வரும் தொடர்களில் வலி மிகுவதில்லை.

எ-டு.

பாத + காணிக்கை = பாத காணிக்கை

பதி + பக்தி = பதிபக்தி

பாச + தீபம் = பாச தீபம்

பந்த + பாசம் = பந்த பாசம்

தாலி + பாக்கியம் = தாலி பாக்கியம்

தெய்வ + தரிசனம் = தெய்வ தரிசனம்

தேச + பக்தி = தேச பக்தி

50) ஐகார வரிசை உயிர்மெய் எழுத்துகள் ஓரெழுத்துச் சொற்களாய் வந்து, அவற்றொடு ‘கள்’ விகுதி சேரும்போது வலி மிகா.

எ-டு.

கை + கள் = கைகள்

பை + கள் = பைகள்

51) ‘நல்ல’, ‘தீய’, ‘அரிய’ எனும் பண்புச் சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகா.

எ-டு.

நல்ல + பாம்பு = நல்ல பாம்பு

நல்ல + கிணறு = நல்ல கிணறு

தீய + பழக்கம் = தீய பழக்கம்

தீய + குணங்கள் = தீய குணங்கள்

அரிய + செயற்பாடுகள் = அரிய செயற்பாடுகள்

அரிய + காட்சி = அரிய காட்சி

52) 'சார்பாக', 'தொடர்பாக'

உயர்திணைப் பெயர்ச்சொல்லுடன் 'சார்பாக', 'தொடர்பாக' என்னும் ஒட்டுகள் வந்து சேரும்பொழுது வல்லினம் மிகா.

எ-டு.

மாணவர் + சார்பாக = மாணவர் சார்பாக

உறுப்பினர் + தொடர்பாக = உறுப்பினர் தொடர்பாக

53) 'போது', 'படி', 'படியால்'

பெயரெச்சத் தொடரின் ஒட்டுகள் 'போது', 'படி', 'படியால்' ஆகியன வரும்போது வல்லினம் மிகா.

எ-டு.

அவன் சென்ற + போது = அவன் சென்றபோது

அவன் செய்த + படி = அவன் செய்தபடி

அவன் சொன்ன + படியால் = அவன் சொன்னபடியால்

54) 'தொறும்' – 'தோறும்'

பெயர்ச்சொல்லொடு 'தொறும்', 'தோறும்' என்னும் பின்னொட்டுகள் வந்து புணரும்பொழுது வல்லினம் மிகா.

எ-டு.

நகர் + தோறும் = நகர்தோறும்

மனை + தோறும் = மனைதோறும்

கல்லூரி தோறும் = கல்லூரிதோறும்

நாடு + தொறும் = நாடு தொறும்

பள்ளி + தொறும் = பள்ளி தொறும்

காடு + தொறும் = காடு தொறும்

55) 'கூட', 'பற்றி', 'பொருட்டு', 'பால்', 'குறித்து', 'தவிர'

எழுவாயாக நிற்கும் பெயர்ச் சொற்களுடன் 'கூட', 'பற்றி', 'பொருட்டு', 'பால்', 'குறித்து', 'தவிர' ஆகிய ஒட்டுகள் சேரும்பொழுது வல்லினம் மிகா.

எ-டு.

தலைவர் + கூட = தலைவர்கூட

நாடு + பற்றி = நாடு பற்றி

ஆசிரியர் + பொருட்டு = ஆசிரியர் பொருட்டு

பசு + குறித்து = பசு குறித்து

ஆடு + தவிர = ஆடு தவிர

56) அம்மை, அப்பர், மாமி, அண்ணி, தந்தை, தம்பி, தங்கை உள்ளிட்ட முறைப் பெயர்களையும், அம்மா, அப்பா, மாமா, மாமி, அண்ணா, அண்ணி, தம்பி, அக்கா உள்ளிட்ட முறைவிளிப் பெயர்களையும் அடுத்துவரும் வல்லினம் மிகா.

எ-டு.

முறைப் பெயர்கள்

அம்மை கோயிலுக்குச் சென்றுள்ளார்

அப்பர் சோறு சாப்பிட்டார்

மாமி சென்றாள்

அண்ணி கூப்பிட்டார்

தந்தை தாங்கினார்

தம்பி பார்த்தான்

தங்கை பூச்சூடினாள்

முறைவிளிப் பெயர்கள்

அம்மா பசிக்கிறது

அப்பா செல்லலாம்

மாமா கொடுப்பீர்

மாமி சாப்பிடுவீர்

அண்ணா செல்வீர்

அண்ணி கேட்பீர்

தம்பி படிப்பாய்

தங்கை பாடுவாய்

அக்கா தருவீர்

6. தவறானதும் சரியானதும்

தவறானது	சரியானது
8 - ம்	8 ஆம்
8 - ல்	8 இல்
8 - வது	8 ஆவது
அக்கரை	அக்கறை
அண்ணாமலைச் செட்டியார்	அண்ணாமலை செட்டியார்
அணுபார்வை	அணுப்பார்வை
அத்தனைச் சிறிய	அத்தனை சிறிய
அத்துணை பெரிய	அத்துணைப் பெரிய
அந்த நாட்கள்	அந்த நாள்கள்
அரசு கல்லூரி	அரசுக் கல்லூரி
அவர்கள்தான்	அவர்கள்தாம்
அவைகள்	அவை
அவைகளை	அவற்றை
அளப்பறிய	அளப்பரிய
அன்னாள் தலைவர்	அந்நாள் தலைவர்
அனுப்புனர்	அனுப்புநர்
ஆசிரியர்ப் பேரவை	ஆசிரியர் பேரவை
ஆடி கழிவு	ஆடிக் கழிவு
ஆண்பால் பெயர்	ஆண்பாற்பெயர்
ஆத்திச்சூடி	ஆத்திசூடி
ஆய தீர்வை	ஆயத் தீர்வை
ஆயக் கலைகள்	ஆய கலைகள்
ஆன்மீகம்	ஆன்மிகம்

தவறானது	சரியானது
இடை நில்லா பேருந்து	இடை நில்லாப் பேருந்து
இயக்குனர்	இயக்குநர்
இருப்பது யார்?	இருப்பது எது?
இருப்பது யார்?	இருப்பவர் யார்?
இலக்கிய பீடம்	இலக்கியப் பீடம்
இலவச சிகிச்சை	இலவசச் சிகிச்சை
இன்றையத் தமிழ்	இன்றைய தமிழ்
உதவி தலைவர்	உதவித் தலைவர்
உயர்க்கல்வி	உயர்கல்வி
உளமாற	உளமார
எடுத்துக்காட்டுக்கள்	எடுத்துக்காட்டுகள்
எல்லா குழந்தைகளும்	எல்லாக் குழந்தைகளும்
என்னைப் பொருத்தவரையில்	என்னைப் பொறுத்தவரையில்
எனது அம்மா	என் அம்மா
ஐநூறு	ஐந்நூறு
ஒருக்கால்	ஒருகால்
ஓட்டுனர்	ஓட்டுநர்
கட்டிடம்	கட்டடம்
கடப்பாறை	கடப்பாரை
கடை பிடித்தான்	கடைப்பிடித்தான்
கண்டதினால்	கண்டதனால்
கத்திரிக்கோல்	கத்தரிக்கோல்
கயிறில்	கயிற்றில்
கருத்துக்கள்	கருத்துகள்
கருப்பு வண்ணம்	கறுப்பு வண்ணம்
கருப்புப் பணம்	கறுப்புப் பணம்
கருவேப்பிலை	கறிவேப்பிலை
கணுகரும்பு	கணுக்கரும்பு

தவறானது	சரியானது
கல்கண்டு	கற்கண்டு
கலந்துக்கொண்டார்	கலந்துகொண்டார்
கலந்துக்கொண்டு	கலந்துகொண்டு
கனா கண்டு	கனாக் கண்டு
காக்கிசட்டை	காக்கிச் சட்டை
காந்தீயம்	காந்தியம்
கார் பருவம்	கார்ப் பருவம்
கார்க் காலம்	கார் காலம்
காலக்கட்டம்	காலகட்டம்
கீழ் பகுதி	கீழ்ப்பகுதி
கீழ்க்கண்ட	கீழ்க்காணும்
குதிரைத் தாண்டியது	குதிரை தாண்டியது
கூட்டுறவு கடை	கூட்டுறவுக் கடை
கூட பிறந்த	கூடப் பிறந்த
கெடிகாரம்	கடிகாரம்
கைபேசி	கைப்பேசி
கைமாறு	கைம்மாறு
கோடை காலம்	கோடைக்காலம்
கோர்த்து	கோத்து
கோர்வையாகப் பேசினார்	கோவையாகப் பேசினார்
கோழிக் கூவும்	கோழி கூவும்
சமயல்	சமையல்
சாய பட்டறை	சாயப் பட்டறை
சான்றோர்ப் பேரவை	சான்றோர் பேரவை
சிகப்பு	சிவப்பு
சித்தரிக்க	சித்திரிக்க
சில்லரை	சில்லறை
சிலச்சில	சிலசில / சிற்சில
சிற்றுண்டி கடை	சிற்றுண்டிக் கடை

தவறானது	**சரியானது**
சின்னதிரை	சின்னத்திரை
சுவற்றில்	சுவரில்
செல்லா காசு	செல்லாக் காசு
சென்னை பல்கலைக்கழகம்	சென்னைப் பல்கலைக்கழகம்
சொல்லும்படிப் பேசினான்	சொல்லும்படி பேசினான்
சொத்து சண்டை	சொத்துச் சண்டை
ஞானப்பீடம்	ஞானபீடம்
தமிழ் எழுத்துக்கள்	தமிழ் எழுத்துகள்
தமிழ் சான்றோர்	தமிழ்ச் சான்றோர்
தமிழர்ப் பண்ணை	தமிழர் பண்ணை
தமிழர்ப் பண்பாடு	தமிழர் பண்பாடு
தரும்படிக் கேட்டான்	தரும்படி கேட்டான்
தயிர்சோறு	தயிர்ச்சோறு
தவறை	தவற்றை
தன்நலம்	தன்னலம்
தலைப்பு செய்திகள்	தலைப்புச் செய்திகள்
தாயைப் போல பிள்ளை	தாயைப் போலப் பிள்ளை
தாற்காலிக	தற்காலிக
திருநிறைச் செல்வன்	திருநிறை செல்வன்
திருநிறைச் செல்வி	திருநிறை செல்வி
திருவளர்ச் செல்வன்	திருவளர் செல்வன்
திருவளர்ச் செல்வி	திருவளர் செல்வி
திரை கதை	திரைக் கதை
துவக்கப்பள்ளி	தொடக்கப்பள்ளி
தூயத் தமிழ்	தூய தமிழ்
தெய்வத் தரிசனம்	தெய்வ தரிசனம்
தேசீயம்	தேசியம்
தேனீர்	தேநீர்
தை பொங்கல்	தைப்பொங்கல்

தவறானது	சரியானது
தொந்திரவு	தொந்தரவு
தொலைகாட்சி	தொலைக்காட்சி
தொலைபேசி	தொலைப்பேசி
தோப்புக்கள்	தோப்புகள்
நஞ்சை	நன்செய்
நல் வாழ்த்துக்கள்	நல்வாழ்த்துகள்
நவீன கழிப்பிடம்	நவீனக் கழிப்பிடம்
நாகரீகம்	நாகரிகம்
நாநிலம்	நானிலம்
நாய் குலைத்தது	நாய் குரைத்தது
நிறைவேறா கனவு	நிறைவேறாக் கனவு
நிலமை	நிலைமை
நேர்க்காணல்	நேர்காணல்
பண்டகசாலை	பண்டசாலை
பசுமை புரட்சி	பசுமைப் புரட்சி
பத்திரிக்கை	பத்திரிகை
பதட்டம்	பதற்றம்
படிக்க படிக்க	படிக்கப் படிக்க
பந்தப்பாசம்	பந்தபாசம்
பழமுதிர்ச்சோலை	பழமுதிர்சோலை
பறவைப் பறக்கும்	பறவை பறக்கும்
பன்னிரெண்டு	பன்னிரண்டு
பாராட்டுக்கள்	பாராட்டுகள்
புகைப் பிடிக்காதீர்	புகை பிடிக்காதீர்
புஞ்சை	புன்செய்
புடவை	புடைவை
புனைப்பெயர்	புனை பெயர்
பெறுனர்	பெறுநர்
பொங்குத் தமிழ்	பொங்கு தமிழ்

தவறானது	சரியானது
பொருட்கள்	பொருள்கள்
பொன்செல்வன்	பொற்செல்வன்
போன்றவைகளில்	போன்றவற்றில்
மண்ணெண்ணை	மண்ணெண்ணெய்
மண்பாண்டம்	மட்பாண்டம்
மருந்து கடை	மருந்துக்கடை
மனதில்	மனத்தில்
முக்கிய செய்திகள்	முக்கியச் செய்திகள்
முக்கிய பங்கு	முக்கியப் பங்கு
முப்பத்தி மூன்று	முப்பத்துமூன்று
முள்புதர்	முட்புதர்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்	சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்
முன்னாள் மின்சார வாரியப் பொறியாளர்	மின்சார வாரிய முன்னாள் பொறியாளர்
முன்னூறு	முந்நூறு
மெத்த படித்தவர்கள்	மெத்தப் படித்தவர்கள்
மெய்ஞானம்	மெய்ஞ்ஞானம்
மென்மேலும்	மேன்மேலும்
மேற்காணும்	மேற்கண்ட
மேனாள்	முன்னாள்
வணிகம்	வாணிகம்
வளர்க்கல்வி	வளர் கல்வி
வாய்ப்புக்கள்	வாய்ப்புகள்
வினாயகர்	விநாயகர்
வீட்டு சமையல்	வீட்டுச் சமையல்
வெங்கலம்	வெண்கலம்
வெய்யில்	வெயில்
வெற்றிப் பெற்றான்	வெற்றி பெற்றான்
வேண்டாம்	வேண்டா

7. வருமொழிகள் வலிமிகும் நிலைமொழிகள் சில

கீழ்க்காணும் நிலைமொழிகளை அடுத்து வருகின்ற வல்லின மொழிகள் மிகும். எடுத்துக்காட்டுகள் பிறை அடைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

அ (அக்காட்சி)	இட்டு (இட்டுக்கட்டு)	எத்துணை (எத்துணைச் சொற்கள்)
அங்கு (அங்குப் பார்)	இத்துணை (இத்துணைக் கேள்விகள்)	எந்த (எந்தப் பாட்டு)
அச்சு (அச்சுக் கோத்தல்)	இந்த (இந்தப் பார்வை)	எப்படி (எப்படிக் கேட்பேன்)
அடுப்பு (அடுப்புச் சமையல்)	இப்படி (இப்படிச் செல்)	எழுத்து (எழுத்துக் கோவை)
அணு (அணுப் பார்வை)	இவ்வகை (இவ்வகைப் பூக்கள்)	எவ்வகை (எவ்வகைப் படிகள்)
அத்துணை (அத்துணைச் சொற்கள்)	இனி (இனிக் காண்போம்)	என (எனக் கூறு)
அதற்கு (அதற்குக் கைம்மாறாக)	இதற்கு (இதற்குப் பக்கத்தில்)	எதற்கு (எதற்குக் கொடுத்தாய்)
அந்த (அந்தச் செய்தி)	இன்றி (இன்றிச் சிறிதும்)	ஏட்டு (ஏட்டுச் சுரைக்காய்)
அப்படி (அப்படிப் போடு)	ஈங்கு (ஈங்குப் பார்)	ஏற்று (ஏற்றுக் கொள்)

அரை	ஈண்டு	ஓடி
(அரைப் பக்கம்)	(ஈண்டுக் கேட்போம்)	(ஓடித் தப்பித்தான்)
அவ்வகை	உந்த	கட்டு
(அவ்வகைச் செயல்)	(உந்தச் செய்தான்)	(கட்டுக் கோப்பு)
அன்றி	உப்படி	கற்று
(அன்றிப் பிற)	(உப்படிப் பார்க்காதே)	(கற்றுக் கொள்)
ஆங்கு	உப்பு	காட்டு
(ஆங்குச் செல்)	(உப்புச் சட்டி)	(காட்டுக் கொட்டகை)
ஆட்டு	உற்று	காற்று
(ஆட்டுக் கல்)	(உற்றுப் பார்)	(காற்றுப் போக்கில்)
ஆட்டை	ஊற்று	கூட்டு
(ஆட்டைப் பார்)	(ஊற்றுத் தண்ணீர்)	(கூட்டுச் சேர்)
ஆண்டு	எ	கேட்டு
(ஆண்டுக் காலம்)	(எப் பக்கம்)	(கேட்டுப் பார்)
ஆற்று	எங்கு	கொக்கு
(ஆற்றுத் தண்ணீர்)	(எங்குப் பார்த்தாய்)	(கொக்குக் கூட்டம்)
இ	எடுத்து	சற்று
(இப் பக்கம்)	(எடுத்துக் காட்டு)	(சற்றுப் பொறுத்து)
இங்கு	எட்டு	சாக்கு
(இங்குப் பார்)	(எட்டுக் கால்)	(சாக்குப் போக்கு)
சுற்று	நாற்று	முன்னர்
(சுற்றுப்புறம்)	(நாற்றுக்கட்டு)	(முன்னர்ச் செய்தி)
செத்து	பட்டு	மெல்ல
(செத்துப் பிழைத்தான்)	(பட்டுத் துணி)	(மெல்லப் போ)
சேற்று	பத்து	மேட்டு
(சேற்றுக் கால்)	(பத்துப் பாட்டு)	(மேட்டுக்குடி)

சோற்று (சோற்றுப் பருக்கை)	பற்று (பற்றுச் சீட்டு)	யாங்கு (யாங்குக் கண்டாய்)
தச்சு (தச்சுத் தொழில்)	பாக்கு (பாக்குக் கொட்டை)	யாண்டு (யாண்டுப் பார்த்தாய்)
தட்டு (தட்டுச் சாமான்)	பாட்டு (பாட்டுத் தொகை)	வர (வரச் சொல்)
தனி (தனிச் சொல்)	பாதி (பாதிச் சொல்)	வாக்கு (வாக்குக் கொடுத்தான்)
திரு (திருச் செல்வம்)	பின்னர் (பின்னர்ச் செய்தி)	விட்டு (விட்டுக் கொடுத்தான்)
தூக்கு (தூக்குத் தண்டனை)	புது (புதுச் செய்தி)	வீட்டு (வீட்டுக்காரன்)
தேட (தேடப் புறப்பட்டான்)	பூட்டு (பூட்டுப் போடு)	வீட்டை (வீட்டைக் கட்டினான்)
தேடி (தேடிப் பார்த்தான்)	பூட்டை (பூட்டைக் கொடு)	வெட்டு (வெட்டுப்பட்டான்)
தொட்டு (தொட்டுப் பார்த்தான்)	பொது (பொதுப் பார்வை)	வெள்ளை (வெள்ளைக் கொக்கு)
தோட்டு (தோட்டுக் கொடு)	போக்கு (போக்குக் காட்டினான்)	வெற்று (வெற்றுப் பார்வை)
நச்சு (நச்சுப் பார்வை)	போட்டு (போட்டுக் காட்டினான்)	வேக (வேகத் தடை)
நடு (நடுச் சாமத்தில்)	மக்கு (மக்குப் பிள்ளை)	வேட்டு (வேட்டுப் போட்டான்)
நாக்கு (நாக்குச் செத்தது)	மாட்டு (மாட்டுக் கொட்டகை)	வேற்று (வேற்றுக் கிரகம்)

நாச (நாசச் செயல்)	மாற்று (மாற்றுப் பாதை)	வைத்து (வைத்துக் கொடு)
நாட்டு (நாட்டுப் பாடல்)	மீட்டு (மீட்டுக் கொடுத்தான்)	வைப்பு (வைப்புத்தொகை)
நாட்டை (நாட்டைக் காப்பாற்று)	முட்டு (முட்டுக் கொடுத்தான்)	விட (விடக் கூடாது)
அனைத்து (அனைத்துப் பெண்களும்)	ஆர (ஆரத்தழுவி)	இடை (இடைச் சொருகல்)
எல்லா (எல்லாச் செயல்களும்)	ஒட்டி (ஒட்டிப் போ)	கிழக்கு (கிழக்குக் கடற்கரை)
மேற்கு (மேற்குத் தொடர்)	வடக்கு (வடக்குத் திசை)	தெற்கு (தெற்குப் பக்கம்)
குறித்து (குறித்துக் கொண்டான்)	கீழ் (கீழ்ப் பார்வை)	குழு (குழுக் கூட்டம்)
கூட (கூடச் சேர்ந்து)	சின்ன (சின்னக் குழந்தை)	சுற்றி (சுற்றிச் சுற்றி)
நோக்க (நோக்கச் செய்)	தட (தடப் பாதை)	தவ (தவச் சாலை)
பொருட்டு (பொருட்டுச் செய்தான்)	போல (போலச் செய்தான்)	மற்று (மற்றுப் பார்த்தேன்)
மற்றை (மற்றைக் கூடுகள்)	வேண்டி (வேண்டிக் கொண்டான்)	முன்னிட்டு (முன்னிட்டுச் செல்)
முழு (முழுத் தேங்காய்)	விட்டு (விட்டுச் சென்றான்)	நிரம்ப (நிரம்பக் கொடுத்தான்)
நிறைய (நிறையக் கொடுத்தான்)	தீ (தீக்கொழுந்து)	பூ (பூச்சூடி)

8. வருமொழிகள் வலிமிகா நிலைமொழிகள் சில

கீழ்க்காணும் நிலைமொழிகளை அடுத்து வருகின்ற வல்லின மொழிகள் மிகா.

அதன்படி (அதன்படி செய்தான்)	அறிவு (அறிவு கொடு)	இவனோ (இவனோ கள்வன்)
அத்தகைய (அத்தகைய சொற்கள்)	அறிவுரை (அறிவுரை கூறினான்)	இவன் (இவன் கள்வன்)
அத்தனை (அத்தனை பாடுபட்டான்)	அறு (அறுபடை)	இவை (இவை போகும்)
அப்படிப்பட்ட (அப்படிப்பட்ட செயல்கள்)	அன்று (அன்று கண்டேன்)	இவ்வளவு (இவ்வளவு கொடுத்தான்)
அப்பர் (அப்பர் பாடல்)	அன்றைய (அன்றைய செய்தி)	இவ்வாறு (இவ்வாறு கூறினான்)
அப்போதைய (அப்போதைய பிரதமர்)	அன்ன (அன்ன பிற)	இன்று (இன்று செய்தான்)
அம்ம (அம்ம பாட்டி)	ஆடிய (ஆடிய கால்)	இன்றைய (இன்றைய செய்தி)
அம்மா (அம்மா பாடினாள்)	ஆடு (ஆடு சென்றது)	இன்ன (இன்ன பிற)
அம்மை (அம்மை பிராட்டி)	ஆவது (ஆவது பெண்ணாலே)	உடைய (உடைய பொருள்)
அரிய (அரிய செய்தி)	ஆவன (ஆவன செய்)	உண்ட (உண்ட சாப்பாடு)

அல்லாத
(அல்லாத பொருள்)

அவரா
(அவரா செய்தார்)

அவரே
(அவரே தோற்றார்)

அவரோ
(அவரோ பெரியவர்)

அவர்
(அவர் போனார்)

அவளா
(அவளா சொன்னாள்)

அவளோ
(அவளோ திருடி))

அவள்
(அவள் போனாள்)

அவனே
(அவனே புலவன்)

அவனோ
(அவனோ திருடன்)

அவன்
(அவன் பொய்யன்)

அவை
(அவை போயின)

அவ்வளவு
(அவ்வளவுதான்)

அவ்வாறு
(அவ்வாறு செய்)

ஆறிய
(ஆறிய சோறு)

ஆறு
(ஆறு கோவில்கள்)

ஆற்றிய
(ஆற்றிய சொற்பொழிவு)

ஆன
(ஆன பொருள்)

இதன்படி
(இதன்படி செய்)

இது
(இது சத்தியம்)

இத்தகைய
(இத்தகைய செயல்)

இப்படிப்பட்ட
(இப்படிப்பட்ட செயல்)

இயற்றிய
(இயற்றிய பாடல்)

இரண்டு
(இரண்டு கண்கள்)

இரு
(இரு செவிகள்)

இல்லாத
(இல்லாத பொருள்)

இவளா
(இவளா செய்தாள்)

இவளே
(இவளே பத்தினி)

உண்டு
(உண்டு கெடுத்தான்)

உதவிய
(உதவிய கரங்கள்)

உயர்வு
(உயர்வு கொண்டான்)

உரிய
(உரிய பாடல்)

உலகு
(உலகு பேசும்)

உள்ள
(உள்ள பொருள்)

உள்ளிட்ட
(உள்ளிட்ட பொருள்கள்)

உற்ற
(உற்ற தோழி)

ஊட்டிய
(ஊட்டிய சோறு)

ஊற்றிய
(ஊற்றிய கிணறு)

எண்ணிறந்த
(எண்ணிறந்த பாடல்கள்)

எதன்படி
(எதன்படி செய்தாய்)

எது
(எது கெட்டது)

எத்தகைய
(எத்தகைய கொடுமை)

அழகிய
(அழகிய பெண்)

அழுது
(அழுது புலம்பினாள்)

அறிந்த
(அறிந்த பாடல்)

அறிந்து
(அறிந்து சென்றான்)

எவளோ
(எவளோ கொன்றாள்)

எவள்
(எவள் செய்தது)

எவனே
(எவனே பெரியவன்)

எவனோ
(எவனோ செய்தான்)

எவன்
(எவன் கொன்றான்)

எவை
(எவை சென்றன)

எவ்வளவு
(எவ்வளவு சொத்து)

எவ்வாறு
(எவ்வாறு சென்றது)

எழு
(எழு பொருள்)

எழுந்த
(எழுந்த கடவுள்)

இவளோ
(இவளோ பாடகி)

இவள்
(இவள் சென்றாள்)

இவனா
(இவனா கொன்றான்)

இவனே
(இவனே செல்வன்)

கண்டு
(கண்டு கொண்டான்)

கதவு
(கதவு திறந்தது)

கரிய
(கரிய கண்கள்)

கல்லாத
(கல்லாத பெண்)

கழுதை
(கழுதை கத்தியது)

கனவே
(கனவே காண்)

கனவோ
(கனவோ செயலோ)

கனிந்த
(கனிந்த பழம்)

குறைந்த
(குறைந்த பணம்)

கூடிய
(கூடிய சொந்தம்)

எத்தனை
(எத்தனை கண்கள்)

எப்படிப்பட்ட
(எப்படிப்பட்ட செயல்)

எப்போதைய
(எப்போதைய சம்பவம்)

எவளே
(எவளே செய்தாள்)

திருநிறை
(திருநிறை செல்வன்)

திறந்து
(திறந்து கொண்டது)

தெற்கத்திய
(தெற்கத்திய பெண்)

தேடிய
(தேடிய சொத்து)

நட்ட
(நட்ட செடி)

நண்டு
(நண்டு கொழுத்தது)

நல்ல
(நல்ல பாடம்)

நன்றி
(நன்றி சொல்)

நாடிய
(நாடிய பொருள்)

நன்று
(நன்று செய்)

எளிய
(எளிய பாடம்)

எனது
(எனது பொருள்)

என்பது
(என்பது கணக்கு)

என்ற
(என்ற பாடல்)

என்று
(என்று கூறு)

என்றைய
(என்றைய கணக்கு)

என்ன
(என்ன செய்தாய்)

என்னுடைய
(என்னுடைய சொத்து)

ஏங்கிய
(ஏங்கிய கண்கள்)

ஏது
(ஏது பொருள்)

ஏழு
(ஏழு கடல்)

ஏனைய
(ஏனைய பாடங்கள்)

ஐந்து
(ஐந்து பாடம்)

ஐம்பது
(ஐம்பது காசு)

கொடு
(கொடு பொருள்)

சாடிய
(சாடிய குற்றம்)

சாத்திய
(சாத்திய கதவு)

சில
(சில சொல்)

சிறிய
(சிறிய பெட்டி)

சிறு
(சிறு தொழில்)

சிறுவர்
(சிறுவர் கூட்டம்)

செடி
(செடி கொடி)

செயற்கரிய
(செயற்கரிய செயல்)

செய்
(செய்பொருள்)

செய்து
(செய்து கொடுத்தாய்)

செய்யும்படி
(செய்யும்படி கூறினான்)

சென்று
(சென்று கெடுத்தான்)

சொல்லும்படி
(சொல்லும்படி செய்தான்)

நாளைய
(நாளைய தினம்)

நானே
(நானே பார்த்தேன்)

நானோ
(நானோ செய்தேன்)

நான்
(நான் பாடினேன்)

நான்கு
(நான்கு பேர்)

நின்று
(நின்று பேசு)

நீ
(நீ போனாய்)

நீட்டிய
(நீட்டிய கை)

நீயே
(நீயே தான்)

நெருங்கிய
(நெருங்கிய தோழி)

பண்டு
(பண்டு கொடுத்தான்)

பதினொரு
(பதினொரு பொருள்கள்)

பந்து
(பந்து போனது)

பரிந்து
(பரிந்து பேசு)

ஒடு
(ஒடு போனான்)

ஒரு
(ஒரு காட்சி)

ஒவ்வொரு
(ஒவ்வொரு செயலும்)

ஒன்பது
(ஒன்பது கிரகம்)

ஒன்று
(ஒன்று கொடு)

ஓங்கிய
(ஓங்கிய கை)

ஓடிய
(ஓடிய கால்)

ஓட்டிய
(ஓட்டிய பேருந்து)

கண்டபடி
(கண்டபடி பேசு)

புனை
(புனை பெயர்)

புனைந்து
(புனைந்து கூறு)

பெரிய
(பெரிய கண்)

பெற்றது
(பெற்றது பிள்ளையா)

பேசும்படி
(பேசும்படி செய்தான்)

சொன்ன
(சொன்ன செய்தி)

சோறு
(சோறு செய்)

தகுந்த
(தகுந்த பாடம்)

தக்க
(தக்க செயல்)

தந்தை
(தந்தை சொல்)

தம்பி
(தம்பி பார்)

தந்த
(தந்த பணம்)

தரும்படி
(தரும்படி கூறினான்)

தாங்கிய
(தாங்கிய கால்கள்)

முன்னைய
(முன்னைய செய்தி)

மூட்டிய
(மூட்டிய தீ)

மேற்கத்திய
(மேற்கத்திய பாடல்)

யாது
(யாது சென்றது)

யாரோ
(யாரோ சென்றனர்)

பல
(பல பொருள்)

பலர்
(பலர் சென்றனர்)

பற்றிய
(பற்றிய கை)

பாடு
(பாடு பொருள்)

பாடிய
(பாடிய பாடல்)

பிரிந்து
(பிரிந்து செல்)

பிற
(பிற செயல்)

பின்னைய
(பின்னைய செய்தி)

புகை
(புகை பிடிக்காதீர்)

வரும்படி
(வரும்படி செய்தான்)

வழங்கும்படி
(வழங்கும்படி கூறு)

வா
(வா கண்ணா)

வாங்கிய
(வாங்கிய பொருள்)

வாடிய
(வாடிய பயிர்)

போன்ற
(போன்ற செயல்)

மகிழ்ந்த
(மகிழ்ந்த செயல்)

மகிழ்ந்து
(மகிழ்ந்து கொண்டிரு)

மட்டுமே
(மட்டுமே போதும்)

முடியாத
(முடியாத செயல்)

முடிவு
(முடிவு செய்)

முதலிய
(முதலிய பொருள்)

முது
(முதுபெரும்)

முந்திய
(முந்திய குதிரை)

முந்தைய
(முந்தைய செயல்)

முற்றிய
(முற்றிய பயிர்)

ஒழிக
(ஒழிக கயவன்)

மூன்று
(மூன்று தெய்வங்கள்)

அத்தகைய
(அத்தகைய செய்தி)

யாவை
(யாவை செய்தன)

யானோ
(யானோ கள்வன்)

வடக்கத்திய
(வடக்கத்திய பையன்)

வணங்கும்படி
(வணங்கும்படி செய்)

வந்த
(வந்த துன்பம்)

வந்து
(வந்து போ)

வந்தே
(வந்தே சென்றான்)

வாடிய
(வாடிய பயிர்)

வருக
(வருக தலைவா)

வருகை
(வருகை புரிந்தான்)

வரும்
(வரும் காலம்)

எழுதும்படி
(எழுதும்படி செய்தான்)

நான்கு
(நான்கு பாடல்கள்)

இத்தகைய
(இத்தகைய செய்தி)

வாட்டிய
(வாட்டிய துன்பம்)

வாழி
(வாழி தலைவா)

வாழ்க
(வாழ்க தமிழ்)

வாழ்ந்த
(வாழ்ந்த காலம்)

விடவும்
(விடவும் செய்)

விருந்து
(விருந்து சாப்பிடு)

வீங்கிய
(வீங்கிய கால்கள்)

வீழ்த்திய
(வீழ்த்திய கை)

வெளுத்த
(வெளுத்த பால்)

வென்று
(வென்று சென்றான்)

வேண்டிய
(வேண்டிய கடன்)

வரைந்த
(வரைந்த படம்)

கொண்டு
(கொண்டு சென்றான்)

எத்தகைய
(எத்தகைய செய்தி)

தகுந்த (தகுந்த பாடம்)	ஏற்ற (ஏற்ற செயல்)	சிறிய (சிறிய பொருள்)
நல்ல (நல்ல பாடம்)	தீய (தீய செயல்)	சார்பாக (சார்பாக செல்)
தொடர்பாக (தொடர்பாக பேசு)	மாமா (மாமா போனார்)	மாமி (மாமி சென்றாள்)
தம்பி (தம்பி தா)	தங்கை (தங்கை கொடு)	வீழ்க (வீழ்க தீயவர்)
போன்று (போன்று செய்)	அண்ணன் (அண்ணன் செய்தான்)	அக்கா (அக்கா கொடுத்தாள்)
படித்த (படித்த பெண்)	படிக்காத (படிக்காத பெண்)	கேட்டபடி (கேட்டபடி கொடு)
எழுதிய (எழுதிய பாடம்)	எழுதாத (எழுதாத பாடம்)	விருப்பப்படி (விருப்பப்படி செய்)
மென்று (மென்று தின்றான்)	சுடு (சுடு சொல்)	அங்கே (அங்கே செல்)
இங்கே (இங்கே செல்)	எங்கே (எங்கே போனாய்)	உள்ளே (உள்ளே படு)
வெளியே (வெளியே செல்)	உயர் (உயர் குழு)	வளர் (வளர் பிறை)
வயதுவந்தோர் (வயதுவந்தோர் செயல்)	சான்றோர் (சான்றோர் கூற்று)	மாணவர் (மாணவர் கூட்டம்)
நிறை (நிறை பொருள்)	கலந்து (கலந்து கொண்டான்)	வருந்திய (வருந்திய செயல்)

9. நிறுத்தக்குறிகள்

பேச்சின் ஒலிப்பு வேறுபாடுகளைக் காட்டத் தேவைப்படுகின்ற குறிகளை 'நிறுத்தக்குறிகள்' என அழைக்கிறோம். பின்வரும் நிறுத்தக்குறிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

1. கால்புள்ளி (,)

2. அரைப்புள்ளி (;)

3. முக்கால்புள்ளி (:)

4. முற்றுப்புள்ளி (.)

5. கேள்விக்குறி (?)

6. உணர்ச்சிக்குறி (!)

7. இரட்டை மேற்கோள்குறி (" ")

8. ஒற்றை மேற்கோள்குறி (' ')

9. மேற்படிக்குறி (,,)

10. பிறை அடைப்பு ( )

11. சதுர அடைப்பு [ ]

12. இணைப்புக்கோடு (-)

13. சாய்கோடு (/)

14. அடிக்கோடு (_)

15. உடுக்குறி (*)

நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்த சில விதிமுறைகள் அவசியம்.

1. கால்புள்ளி (,)

கால்புள்ளி இட வேண்டிய இடங்கள்:

1.1 ஒரே எழுவாயைக் கொண்டு அடுக்கி வரும் முற்றுவினைகளுக்கு இடையில் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

உங்கள் நூலைப் படித்தேன், ரசித்தேன், சிரித்தேன்.

1.2 ஒரே பெயரைத் தழுவும் சொற்களுக்கு இடையிலும் தொடர்களுக்கு இடையிலும் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

இங்குச் சாதி, மத, நிற வேறுபாடுகள் கிடையாது.

1.3 ஒரே வினையைத் தரும் சொற்களுக்கு இடையிலும் தொடர்களுக்கு இடையிலும் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

அந்தப் பாடல் இனிமையாக, சுகமாக, எளிமையாக, நயமாக இருந்தது.

1.4 தொடர்புபடுத்திக் கூறப்படும் சொற்களுக்கு இடையிலும் தொடர்புகளுக்கு இடையிலும் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

தாய், தந்தை இருவர் முகத்திலும் மகிழ்ச்சி.

1.5 ஒரே சொல் அல்லது தொடர் இருமுறை அடுக்கி வரும்போது அவற்றிற்கு இடையில் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

பகுத்தறிவு, பகுத்தறிவு என்று பேசாதீர்.

1.6 ஒரு வாக்கியத்தை அதன் முன் உள்ள வாக்கியத்துடன் தொடர்புபடுத்தும் சொற்களையும் தொடர்களையும் அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

அவர் நல்லவர். ஆனால், வல்லவர் அல்ல.

அங்குச் சென்றனர். அடுத்து, ஓய்வு எடுத்தனர்.

1.7 வாக்கியத்தின் தொடக்கத்தில் வாக்கியத்திற்கே வினையடையாக வரும் சொற்களையும் தொடர்களையும் அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

பொதுவாக, அவர் அரசியலில் ஈடுபாடு கொள்வதில்லை.

1.8 'குறிப்பாக', 'அதாவது' என்னும் சொற்களைக் கொண்ட தொடருக்கு முன்னும் பின்னும் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள், நல்ல உழைப்பாளிகள்.

1.9 அழுத்தத்திற்காக வரிசைமுறை மாற்றி எழுதப்படும் தொடர்களுக்கு இடையில் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

அறையில் மண்டிக்கிடந்தது, குப்பை.

1.10 ஒரு முழுமையான கூற்று வாக்கியத்தைத் தொடர்ந்து வரும் 'இல்லையா', 'அல்லவா' போன்ற சொற்களுக்கு முன் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

ஆசிரியர் கடுமையாகத் திட்டினார், இல்லையா?

1.11 ஒரே வாக்கியத்தில் அடுக்கி வரும் வினாத் தொடர்களுக்கு இடையில் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

அவன் வருவானோ, மாட்டானோ?

1.12 ஒரே வாக்கியத்தில் அடுத்தடுத்து வரும் ஏவல் வினைகளுக்கு இடையில் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

அவரைத் தடுக்காதே, செல்ல விடு.

1.13 எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் தொடர் வரும்போது எழுவாயை அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

என் தங்கையின் திருமணம், வருகிற 30ஆம் தேதி நடைபெற உள்ளது.

1.14 உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் வாக்கியத்தில் இடம்பெறும் உணர்ச்சியைக் குறிப்பிடும் சொல்லை அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

சே, என்ன வாழ்க்கை இது!

ஆ, என்ன அழகு!

1.15 வாக்கியத்தின் தொடக்கத்தில் வரும் 'ஆமாம்', 'இல்லை', 'ஓ', 'ஓகோ' போன்ற சொற்களை அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

ஆமாம், நான் ஏழைதான்.

இல்லை, நான் பள்ளிக்குச் செல்லவில்லை.

ஓ, நீங்கள் போகலாம்.

ஓகோ, நீங்கள்தான் மாணவர் தலைவரா?

1.16 இரு வினாக்களுக்கு இடையில் வரும் 'இல்லை' என்ற சொல்லை அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

இது சரியா, இல்லை, தவறா?

1.17 விளிக்கும் சொற்களை அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

"பாட்டி, சாப்பீட்டீர்களா?" என்றான் பேரன்.

1.18 கடிதத்தில் இடம்பெறும் விளிக்கும் சொல் அல்லது தொடர், முடிக்கும் சொல் அல்லது தொடர் ஆகியவற்றை அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

ஐயா,

அன்புள்ள தங்கைக்கு,

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

1.19 முகவரியில் பெயர், பதவி, நிறுவனம் போன்ற விவரங்கள் ஒவ்வொன்றையும் அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

முனைவர் கண்ணகி,
செயலாளர்,
41, இலக்குவனார் சாலை,
அண்ணா நகர்,
சென்னை.

1.20 தலைப்பு எழுத்தைப் பெயருக்குப் பின்னால் பயன்படுத்தும்போது பெயரை அடுத்துக் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

கோவலன், மா.

1.21 பட்டங்களைக் குறிக்கும் சுருக்கக் குறியீடுகளுக்கு இடையில் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

முனைவர் சு. செல்லப்பன் எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.

1.22 மாதத்தின் பெயரைத் தொடர்ந்து வரும் தேதிக்கும், ஆண்டுக்கும் இடையில் கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

ஏப்ரல் 30, 2014

2. அரைப்புள்ளி (;)

அரைப்புள்ளி இட வேண்டிய இடங்கள்:

2.1 ஒரு குறிப்பிட்ட கருத்தை மையமாகக் கொண்ட முற்றுத்தொடர்களுக்கு இடையில் அரைப்புள்ளி இட வேண்டும்.

எ-டு

எல்லாப் பணிகளிலும் தமிழ் இடம்பெற வேண்டும்; தமிழ்மொழி வளர வேண்டும்; தமிழ் சிறப்புப்பெற வேண்டும்.

2.2 'ஒப்புமைப்படுத்துதல்', 'மாறுபட்ட நிலைகளை இணைத்துக் காட்டுதல்' என்னும் பொருட்கூறுகளை அடிப்படையாகக் கொண்ட முற்றுத் தொடர்களுக்கு இடையில் அரைப்புள்ளி இட வேண்டும்.

எ-டு

அறிஞர் அடக்கமாக இருப்பர்; மூடர் ஆரவாரம் செய்வர்.

தாய், மகள் இருவரும் ஒரு பக்கம்; தந்தை மட்டும் இன்னொரு பக்கம்.

2.3 ஒரு தொகுப்பு ஒன்றுக்கு மேற்பட்ட விவரங்களைக் கொண்டிருக்கும்போது தொகுப்புகளுக்கு இடையில் அரைப்புள்ளி இட வேண்டும்.

எ-டு

வெற்றி பெற்றவர்கள்:

கண்ணகி, கோவை; மணிமேகலை, சேலம்; கௌதமி, திருச்சி; வாசுகி தருமபுரி; இந்திரா, சென்னை.

3. முக்கால்புள்ளி (:)

முக்கால்புள்ளி இட வேண்டிய இடங்கள்:

எ-டு

எல்லோரும் கேட்ட கேள்வி: அடுத்த சந்திப்பு எப்போது?

சொத்து வரி: முழுச் சொத்து மதிப்பின் மீதான வரி.

பட்டா : நிலம், வீட்டு மனை முதலியவை குறித்த ஆவணம்.

3.1 விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

பெயர் : கொ. அமுதினி

பிறந்த தேதி : 17.1.1996

பிறந்த ஊர் : சென்னை

3.2 ஒருவரை அவருடைய செயல்பாட்டோடு அல்லது செயல்பாட்டுக்கு உரியதோடு தொடர்புபடுத்த முக்கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

வசனம் : சோமு

இயக்கம் : யாழினி

பாட்டு : மணி

3.3 தலைப்புச் செய்திகளில் தலைப்புக்கும் அதனோடு தொடர்புடைய நபர், நிறுவனம் போன்றவற்றிற்கும் இடையில் முக்கால்புள்ளி இட வேண்டும்.

எ-டு

இடைத்தேர்தல் : சம்பத் ஆணை

சரக்கு வரி : மத்திய அரசு சட்டம் இயற்ற வலியுறுத்தல்

4. முற்றுப்புள்ளி (.)

எ-டு

திருமணம் என்பது காலத்தின் கட்டாயம்.

"இந்த உலகில் மனிதன்தான் உயர்ந்தவன்."

பின்வரும் இடங்களில் முற்றுப்புள்ளி தேவை இல்லை.

எ-டு

திருமதி விசாலாட்சி

சேலம் க. மாதவன்

அறிஞர் அண்ணா

முனைவர் இரா. மணிவேலன்

செந்தமிழ்ச்செல்வர் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை

5. கேள்விக்குறி (?)

5.1 வினா வாக்கியத்தின் முடிவில் கேள்விக்குறி இட வேண்டும்.

எ-டு

கணினியின் பயன்கள் எவை?

5.2 ஐயம், நம்பிக்கையின்மை ஆகியவை தொனிக்கும் வாக்கிய முடிவில் கேள்விக்குறி இட வேண்டும்.

எ-டு

சிபாரிசு இல்லாமல் வேலை கிடைக்கும்?

5.3 வினாக் குறிப்பு அடங்கிய, முற்றுப் பெறாத வாக்கியத்தின் முடிவில்.

எ-டு

அப்பெண்ணின் கதி....?

5.4 வியப்போடு ஒன்றை வினவும்போது கேள்விக்குறியையும் உணர்ச்சிக் குறியையும் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

எ-டு

அமெரிக்காவிற்கா போகிறீர்கள்?!

5.5 அடுக்கி வரும் வினாக்களுக்கு இடையில் தேவையில்லை. (இறுதி வினாவில் மட்டும் இடலாம்.)

எ-டு

இது வீடா, இல்லை, மாளிகையா?

6. உணர்ச்சிக்குறி (!)

6.1 உணர்ச்சியைக் குறிக்கும் சொல்லையடுத்து உணர்ச்சிக்குறி இட வேண்டும்.

எ-டு

ஆஹா! *ஐயோ!*

6.2 உணர்ச்சியைக் குறிக்கும் சொல் இரட்டித்து வரும்போது அதில் இரண்டாவதாக வருவதை அடுத்து உணர்ச்சிக்குறி வரும்.

எ-டு

ஆஹா ஆஹா! *ஆ ஆ!* *ஐயோ ஐயோ!*

6.3 கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒரே சொல்லை இரு முறை கூறும்போது ஒவ்வொன்றின் பின்னும் உணர்ச்சிக்குறி வரும்.

எ-டு

பாம்பு! பாம்பு!

6.4 விளிச்சொற்களையும் விளித்தொடர்களையும் அடுத்து உணர்ச்சிக்குறி வரும்.

எ-டு

உடன்பிறப்புகளே!

7. இரட்டை மேற்கோள்குறி (“ ”)

ஒருவரின் கூற்றைத் தனித்துக் காட்ட இரட்டை மேற்கோள் குறியை இட வேண்டும்.

எ-டு

“இது எப்படி இருக்கிறது?” என்றான் அவன்.

8. ஒற்றை மேற்கோள்குறி (‘ ’)

ஒருவரின் கூற்றுக்குள் (இரட்டை மேற்கோள்குறிக்குள்) வரும் இன்னொருவரின் கூற்றைத் தனித்துக் காட்ட.

எ-டு

“களவியல் சங்க காலத்தைச் சார்ந்தது என்ற கருத்தையே இவர் ஏற்றுக்கொண்டு, ‘இதன் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகாது’ என்கிறார்.”

10. தமிழின் தலையாய நூல்கள்

I. ஐம்பெருங் காப்பியங்கள்

1. சீவக சிந்தாமணி
2. சிலப்பதிகாரம்
3. மணிமேகலை
4. வளையாபதி
5. குண்டலகேசி

II.. எட்டுத்தொகை நூல்கள் (சங்க இலக்கியங்கள்)

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

III.. பத்துப்பாட்டு நூல்கள் (சங்க இலக்கியங்கள்)

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப் படை
5. முல்லைப் பாட்டு
6. மதுரைக் காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப் பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

IV. பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை

3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணைமொழி ஐம்பது
10. திணைமொழி நூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி நானூறு
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை

V. இலக்கண நூல்கள்

1. தொல்காப்பியம்
2. நன்னூல்